
# எண் கணித சோதிடத்தில்

# கர்ம எண்




THIES BOOK OF KARMIC NUMBERS

S.துதிபாலசுந்தரன்

PR

# எண்கணித சோதிடத்தில்
# 'கர்ம எண்'

எஸ். துதியமலசுந்தரன்

**SHUBASHINIE PUBLICATION**
**சுபாஷினி பதிப்பகம்**
23, St. Davids Drive
Edgware, middlesex
HA8 6JQ. United Kingdom.

முதற் பதிப்பு:

அக்டோபர் 2000

உரிமை : ஆசிரியருக்கே

*All rights reserved No part of this publication or the ideas certained here in may be reproduced with out the prior permision of the publisher.*

*Price:* £ 6-99p

## அன்பு மகளுக்கு அர்ப்பணம்

இந்நூல் உருவாவதற்கு எனக்குப்
பலவகைகளிலும் ஒத்துழைத்த எனது
அருமை **மகள் சுபாஷினி** பல்லாண்டு சகல
நலன்களையும் பெற்று வாழ வேண்டுமென
அனைத்தும் வல்ல இறைவனை வேண்டி இந்நூலை
அவருக்கு அர்ப்பணம் செய்கிறேன்.

நூலாசிரியர்

*This Book*

*is dedicated to my daugher*

*miss* SHUBASHINIE THUTHIPAALASUNDARAN

***- Author***

# சிறப்புரை

எண்கணித சோதிடம் பற்றித் தமிழ் ஆங்கிலம் உட்பட இதுவரை பல மொழிகளில் பல நூல்கள் வெளிவந்துள்ளன.

ஆனால் கர்ம எண்ணின் முக்கியத்துவத்தைப் பற்றி வரும் முதல் நூலே நீங்கள் கையிலேந்தி இருக்கும். ''எண் கணித சோதிடத்தில் ''கர்ம எண்'' என்ற இந்த நூல்.

இந்த அருமையான நூலை எழுதிய துதி பாலசுந்தரன் அவர்கள் கடந்த முப்பத்தேழு ஆண்டு களுக்கு மேலாக மரபியல் சோதிடம், கைரேகை சாஸ்திரம்; குறிப்பாக எண்கலை சோதிடத்திலும் பல ஆராய்சிகளை நிகழ்த்தியவர்.

தமது வாழ் நாளில் நெடுங் காலத்தை சோதிடக் கலையின் நுணுக்கங்களை அறிவதற்கே செலவிட்டு வருகிறார். அதன் பெறு பேறாகவே இதுவரை எண்கணித சோதிட நிபுணர்கள் எவரும் அறிந்திராத ''கர்ம எண்'' பற்றி நுணுக்கமாக ஆராய்ந்து இந்த நூலை முதல் நூலாக ஆக்கியுள்ளார்.

கர்ம எண்ணே ஒருவரது வாழ்க்கையை நிர்ணயிக்கிறது. இந்தப் பேருண்மையை தகுந்த



ஆதாரங்களுடன் இந்நூலில் நூலாசிரியர் துதிபால சுந்தரன் ஆணித்தரமாக எடுத்துக் காட்டியுள்ளார்.

வாசகப் பெருமக்கள் தமது கர்ம எண்களுக்குரிய பலாபலன்களை மட்டும் பார்க்காது, இந்நூலை ஆரம்பம் முதல் இறுதிவரை முழுமையாகக் கிரகித்து படிப்பது மிக அவசியம்.

இதுவரை எந்தெந்த திசைகளிலோ சென்று வாழ்க்கையில் பல துன்பங்களையும், சோதனை களையும் சந்தித்தவர்கள் இந்நூலை படித்து தத்தம் கர்ம எண்களை அறிந்து அதற்குத் தக்க முறையில் பெயர் மாற்றம் செய்தால் கண்டிப்பாக வாழ்வில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தலாம்.

இவர் ஈழத்தின் இதயம் போன்றமைந்த யாழ்ப் பாண மாவட்டத்தில் உள்ளடங்கிய தெல்லிப்பழை என்ற ஊரில் சைவமத ஆசாரத்தில் உயர்ந்த, சின்னதம்பி செல்லத்துரை - தெய்வானைப்பிள்ளை தம்பதிக்கு மைந்தனாகப் பிறந்தவர்.

இவர் கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக லண்டன் மாநகரிலே வாழ்ந்து வருகிறார்.

கணிதமேதை சகுந்தலாதேவி, இங்கிலாந்தில் வானொலி மூலம் தமக்கு சோதிட ஞானம் முழுமையாக உண்டெனச் சொல்லிப் பலரையும் ஏமாற்றி வந்த சமயத்தில், சகுந்தலா தேவியின் முகத்திரையைக் கிழித்து லண்டன் வானொலியில் பகிரங்கமாகச் அவருக்குச் சவால்விட்டு அழைத்து,

அவரைப் பின் வாங்கி ஓடச்செய்தது, இந்நூலாசிரியர் துதிபாலசுந்தரன் என்பது உங்களில் பலர் ஏற்கனவே அறிந்த சேதியாகும். இப்படியாக உயர்ந்த தகுதி மிக்க துதிபாலசுந்தரன் எண்கணிதத் துறையில் மேன்மேலும் இந்நூல் போல் அரிய நூல்களை எழுதிச் சாதனை புரிய எல்லாம் வல்ல இறைவனின் அருள் கிட்டுவதாக.

**Dr. S. தில்லைநாதன்**

Southgate - London - U.K.

# என்னுரை

எண் கணித சோதிடம் பற்றிப் பல வருடங்கள் நான் ஆராய்ச்சி செய்து, எடுத்த முடிவுகளின் படி ஒருவர் பிறந்த தினத்தை வைத்துக் கணிக்கப்படும் கர்ம எண்ணே ஒருவருடைய வாழ்க்கையில் அவர் நாளாந்தம்' சந்திக்கும் எல்லா விடயங்களுக்கும் அடிப்படையாக அமைகிறது.

இந்தக் கருத்தை முதன் முதல் வலியுறுத்தி எழுதப்பட்ட இந்நூல் வாசகர்களை மிகவும் கவரும் என்பது என் நம்பிக்கை.

இந்நூலை முதன் முதல் தமிழில் வெளியிடுகிறேன்.

மிக விரைவில் ஆங்கிலம், ஹிந்தி, மொழிகளிலும் வெளி வரவுள்ளது.

இந்நூலில் நான் கூறிய எண்கணித சோதிடம் பற்றிய கருத்துக்களை ஏற்கனவே நன் கூறக் கேட்ட என் நண்பர்கள் இதை நூலாக்கி வெளியிட வேண்டுமென்று பல வருடங்களாக வலியுறுத்தி வந்தார்கள்.

**முக்கியமாக என் நண்பர் டாக்டர் தில்லைநாதனின் ஊக்குவிப்பும் தூண்டுதலுமே இப்புத்தகம் உருவாகக் காரணமாக இருந்தது.**

இப்போதுதான் என் பணியைச் செய்து முடிக்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

வாசகர்களுக்கு ஒரு தகவல்! எண்கணித சோதிடம் பற்றி கெய்ரோ என்ற மேலைக்தேய! ஆய்வாளரே முதன் முதலாக உலகிற்கு அறிமுகப்படுத்தினார்.

அவர் எகிப்து, இந்தியா கிரேக்கம் போன்ற நாடுகளுக்குச் சென்று பல்லாண்டுகள் ஆங்காங்கே தங்கி இருந்து ஆய்வுகள் செய்து எண்கணித சோதிடம் பற்றி முதன் முதலாக தமது நூல்கள் வாயிலாக உலகிற்கு அறிவித்தார். அதைப்பற்றி நான் விளக்கத் தேவையில்லை.

இந்நூலை நான் உருவாக்க முற்பட்ட சமயம் எனக்கு தகுந்த முறையில் ஊக்கத்தை தந்த என் அன்புப் பிள்ளைகள் சுபாஷினி, மதியழகன், சுபோஷினி , அன்பு மனைவி கமலாதேவி ஆகியோர்க்கு நன்றி.

மற்றும் இந்தியாவில் இந்நூலை அச்சிட முனைந்த நேரத்தில் என் அன்பு நண்பர் சிலோன் விஜயேந்திரன் பல வழிகளில் ஒத்துழைப்பைத் தந்தார்.

திருவாளர் நெப்போலியன் (சகாயம்) உட்படப் பலரும் பல வழிகளில் எனக்கு உதவினார்கள்.

**அனைவர்க்கும், நன்றி.**

அன்பு வாசகர்களே! இந்நூல் பற்றிய உங்கள் கருத்து களை தாராளமாக எனக்கு அறியத்தரலாம்.

அன்புடன்

**எஸ். துதிபாலசுந்தரன்**

**S.THUTHIPAALASUNDARAN**
23, St., Davids Drive
Edgware, Middlesex
HA8 6JQ - United Kingdom
Telephone / Fax + 44 208 952 5010
E -Mail Address: thuthies@allaikal.com

# கர்ம எண்

**கர்மம் என்ற சொல் வடமொழியான சமஸ்கிருதச் சொல்.**

**இதன் பொருள் - செயல்; அனைத்துச் செயல் களையும் கர்மம் எனலாம்.**

**இந்த சொல் - 'கர்மா' - ஒருவனது முன் வினை களின் விளைவுகளைக் குறிக்கும்.**

**முற்பிறவியைப் பற்றி உலகெங்கிலும் பலமான - வலுவான நம்பிக்கை பரவலாக இருந்து வருகின்றது.**

**அதே போன்று மறுபிறவியைப் பற்றிய நம்பிக்கையும் இன்று உலகம் முழுவதும் பரவலாக இருந்து வருகிறது.**

**ஒருவரது மறுபிறவி அல்லது எதிர்காலத்தில் ஒருவரது வாழ்க்கை எப்படி அமையும் என்பதை நிர்ணயிப்பதும் கூட ஒருவரது தார்மிக - நீதி கொண்ட செயல்களே.**

அதாவது, கர்மாவின் விளைவுகளே ஒருவரது எதிர் காலம் அல்லது மறுபிறவி. இதையே பொதுவாக ஊழ் அல்லது விதி என்கிறோம்.

சுருங்கக் கூறினால், காரணம் இன்றி விளைவு இல்லை.

இங்கே காரணம் என்பதை செயல் கர்மா என்று எடுத்துக் கொண்டால், பலன் விளைவு என்பது தானே விளங்கும்.

நமது தொடர்புகளிலும் உறவுகளிலும் ஒரு ஆழமான பாதிப்பை ஏற்படுத்துகிறது கர்மா.

எனது தீர்க்கமான சிந்தனையினதும் அனுபவத் தினதும் முடிவும் இதுவே.

கர்மாவே அனைத்திற்கும் காரணம்.

அதனால்தான் கர்ம எண் ஒருவரது வாழ்க்கையை - அது இம்மை - இப்பிறவியில் தீர்மானிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை உறுதியாகக் கூறுகிறேன்.

ஒருவரது முற்பிறவியில் அவர் செய்த நற்செயல்கள் அல்லது தீய செயல்கள் ஆகியவற்றை பொறுத்தே இந்த பிறவி அமைந்துள்ளது. இதை நம்புவதும் நம்பாததும் அவரவரைப் பொறுத்தது.

ஒருவரது கர்மாவைப் பொறுத்தே அவரது பிறந்த வருடம் - மாதம் - தேதி அமைகிறது.



அந்த குறிப்பிட்ட பிறந்த வருடம் - மாதம் - தேதியைப் பொறுத்தே அவரது கர்ம எண் (Karmic Number) அமைகிறது.

இந்தப் பிறவியில் ஒருவர் செய்வதும் அனுப விப்பதும் கூட அந்தக் கர்ம எண்ணைச் சார்ந்தே நடை பெறுகிறது.

ஒரு குறிப்பிட்ட இடத்தில் - குறிப்பிட்ட நேரத்தில் - குறிப்பிட்ட வருடம், மாதம், தேதியில் - ஒரு குறிப் பிட்ட ஆணுக்கும் பெண்ணுக்கும் அவர்களது நிலை எப்படி இருப்பினும் அவர்களுக்கு பிள்ளையாக பிறப் பதும் கூட ஏற்கனவே முற்பிறவியில் நாம் செய்த கர்மா வால் நிர்ணயிக்கப்பட்டதேயாகும்.

# "கர்ம எண்" ஒரு விளக்கம்

எண் கலையைப் பற்றித் தமிழில் இது வரை மிகப்பல நூல்கள் வெளிவந்துள்ளன.

எண் சோதிடக் கலையில் தாமே மேதைகள் - சிறந்த வல்லுநர்கள் எனக்கூறிக் கொள்ளும் எவருமே தத்தமது நூல்களில் சரியான முறையில் கர்ம எண் பற்றி எந்த மொழியிலும் தெளிவான திட்டவட்டமான விளக்கங்கள் தரவில்லை.

கெய்ரோ (Cheiro) என்ற மேற்கத்திய சாஸ்திர நிபுணர் பல ஆண்டுகளுக்கு முன்பு எழுதிய எண் கணித சோதிடத் தத்துவத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு தான் எண் கலையில் தமக்கு தாமே "மேதை - வல்லுநர்" என்று முடிசூட்டிக் கொண்டு எண்கலை சோதிடத்தைப் பற்றி எழுதி வந்துள்ளனர்.

கெய்ரோவின் எண்கலைப் புத்தகத்தைத் (Cheiro's Book of Numbers) தழுவியே பண்டிட் சேதுராமன் உட்பட பலரும் நூல்களை எழுதியுள்ளனர்.

எண் சோதிடக்கலை நிபுணர் கெய்ரோவின் ஆராய்ச்சி நூலை அடிப்படையாகக் கொண்டு - அதே வேளையில் எனது முப்பத்தியேழு வருட தீவிரமான



ஆராய்ச்சியின் விளைவாகவும், சொந்த அனுபவ ஞானத்தையும் கொண்டு உருவாக்கப்பட்டதே இந்த நூலாகும்.

கர்ம எண் பற்றி முதன்முதலாக எனது இந்த நூல் மூலம் சரியான - மிகமிகத் தெளிவான விளக்கங்களை ஆணித்தரமாக இங்கே தருகிறேன் என்பதை வாசகப் பெருமக்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

எண் கணித சோதிடம் பற்றி ஆங்கிலம் தமிழ் உட்பட உலகின் பல்வேறு மொழிகளில் இதுவரை எழுதப்பட்டு வெளிவந்துள்ள நூல்களில் கர்ம எண் பற்றி சரியான கணிப்புகளையோ, விளக்கங்களையோ எவரும் தரவில்லை.

ஒரு சாதாரண மனிதன் அறிந்து, தெளிந்து - புரிந்து கொள்ளக் கூடிய எளிய முறையில் கர்ம எண் பற்றி எனது இந்த நூலில் விளக்குகிறேன்.

# கெய்ரோவும் பண்டிட் சேதுராமனும்

கெய்ரோவின் (Book of Numbers) எண் கலை நூலை எடுத்து அதில் உள்ள சாராம்சங்களை நான் ஆராய்ச்சி செய்து கொண்டிருந்த அதே சமயத்தில் பண்டிட் சேதுராமன் தமிழில் எழுதிய ''அதிர்ஷ்ட விஞ்ஞானம் அல்லது நீங்களும் மிக்க அதிர்ஷ்டசாலிகள் ஆகலாம்'' என்ற பிரசுரம் எனக்கு கிடைத்தது.

கிட்டதட்ட எனது பதினாறாவது வயதில் Cheiro's Book of Numbers - கெய்ரோவின் எண் கலை நூலை படித்து விளங்கிக் கொண்ட நான், அந்த நூலில் கண்ட அம்சங்களை அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தி பார்க்கும் போது சில அம்சங்கள் நடைமுறை வாழ்க்கையில் உண்மைக்கு புறம்பாகவே நிகழ்வதை அனுபவ ரீதியாக நான் அறிந்திருக்கிறேன்.

இந்த இரண்டு நூல்களையும் ஒப்பிட்டு பார்த்த எவருக்கும், ஒரு சில பகுதிகளை கெய்ரோவின் நூலில் சொல்லப்பட்டவற்றை அப்படியே மொழி பெயர்த்து கையாளப்பட்டிருப்பது தெளிவாக தெரிகிறது.



கெய்ரோவின் நூலில் சில பல பகுதிகளையும் கருத்துகளையும் எடுத்து பண்டிட் சேதுராமன் தமது நூலில் தமக்கு கிடைத்த எடுத்துக்காட்டுக்களை தமது வர்த்தக வாய்ப்புக்களை பெருக்கி கொள்வதற்கு தமக்கு வாய்ப்புகளை தருகின்ற நாடுகளின் சூழ் நிலைக்கேற்ப உதாரணங்களையும் எடுத்துக்காட்டுகளையும் தந்துள்ளது அப்பட்டமாக தெரியவருகிறது.

# எண் சோதிட அடிப்படையில் நிச்சயப்படுத்திச் சொல்ல முடியாதவை

எண் சோதிடத்தின் அடிப்படையில் சிலவற்றை உறுதிப் படுத்திக் கூற இயலாது.

ஒருவரின் சாதி, மதம், அவரது இனம், அவர் குருடா, முடமா, செவிடா, திருமணம் ஆனவரா அல்லது ஆகாதவரா என்பதைப் பற்றி எல்லாம் எண் கலையை வைத்து நிச்சயமாக உறுதிபடக் கூற முடியாது.

அதிர்ஷ்டச் சீட்டு, Gambling எனப்படும் சூதாட்டம், லாட்டரி (Lottery), குதிரைப் பந்தயம் (Horse Racing), சீட்டாட்டம் போன்ற சூதாட்ட கலைகளுக்கு இந்த எண் கலை மூலம் அதிர்ஷ்ட எண்ணை (Lucky Number) தேர்வு செய்து உறுதியாக வெற்றி பெற இயலாது. அப்படி ஏதாவது வெற்றி இதன் மூலம் கிடைக்கப் பெற்றால் அதனை தற்செயலாக நிகழ்ந்ததாகத்தான் (Coincidence) கருத வேண்டும். இதனை வாசகர்கள் கருத்தில் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.



மேலும் எண் கலை அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட மனிதனின் வம்சம், பாரம்பரியம் (Genetics) ஆகியவற்றையும் சொல்ல முடியாது.

இன்னும் சொல்லப் போனால், மெட்டாபிசிக்ஸ் (Metaphysics), குறி சொல்லும் கலைகள் (Occut Sciences), சோதிடம் (Astrology), எண் கலை (Numerology), கைரேகை சாஸ்திரம் (Palmistry) ஆகிய கலைகள் மூலமும் எதிர்காலத்தைப் பற்றி நூறு சதவிகிதம் நிச்சயப் படுத்தி சொல்ல முடியாது.

அப்படி ஏதாவது வெற்றி கிடைத்தால் அது தற்செயலாக நிகழ்ந்த ஒன்று (Coincidence) என்றுதான் கருதவேண்டும்.

# மனிதர்களை ஆளும் எண்கள்!

எண்கலையில் பொதுவாக 9 - ஒன்பது எண்கள் இருக்கின்றன.

அவை 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, என்பன. இது அனைவரும் அறிந்ததே.

இந்த ஒன்பது எண்கள் தான் உலகையே ஆள்கின்றன.

ஒவ்வொரு மனிதனும் சராசரியாக (5) ஐந்து எண்களால் ஆளப்படுகிறான். அவையாவன:-

1. **பிறந்த தேதி எண் / குணாதிசய எண்/ Character Number**

2. **கூட்டு எண் / விதி எண் / Fate Number**

3. **கர்ம எண் / Karmic Number**

4. **பெயர் எண் / Name Number as it appears in your birth certificate**



5. **ஒருவர் வழக்கமாக அழைக்கப்படும் பெயர் (Pet Name / NicK Name / The Name the person is usually called by)**

மேற்கண்ட ஐந்து (5) எண்களும் ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு. உலகில் எந்த இரு மனிதப் பிறவிகளுக்கும் இடையே ஏதோ ஒரு எண் பொதுவான எண்ணாக அவசியம் இருக்கின்ற காரணத்தினால் தான் உலகம் சுமுகமாக இயங்கிக் கொண்டு இருக்கிறது.

கர்ம எண்ணுடன் சேர்ந்து ஒன்றோ அல்லது இரண்டு எண்களோ அல்லது அதற்கு மேற்பட்ட எண்களோ நட்பு எண்களாக அமைந்து, அத்தகைய நபர்கள் பழகும் வாய்ப்பு பெற்றால் இணைபிரியாத நண்பர்களாகவோ அல்லது மனமொத்த தம்பதியாகவோ ஆகி விடுகின்றனர்.

அதே நேரத்தில் கர்ம எண்ணுடன் ஒன்றோ அல்லது இரண்டு எண்களோ அல்லது அதற்கு மேற்பட்ட எண்களோ பகை எண்களாக அமைந்து விட்டால் அத்தகைய நபர்கள் நேருக்குநேர் சந்திக்கும் போது, அல்லது பேசும் போது அவர்களுக்கிடையே அவர்களை அறியாமலேயே வெறுப்புணர்ச்சி உண்டாகிறது.

ஒருவருடைய பொதுவான குணங்கள் எப்படி இருப்பினும் சரி. அவரது குறிப்பிட்ட குணங்கள்

அவருடைய தாய் - தந்தை மரபணு எனப்படும் (Genes) ஜீன்ஸ் படியே அமைகிறது. அவர் எந்த நாட்டை சேர்ந்தவரானாலும் சரி மேற்கண்ட அம்சமே உண்மை யாக இருக்கிறது.

ஒரே எண்ணில் பிறந்த இரு நபர்களின் இயல்புகள் ஒன்றாக இருப்பினும் அவர்களது பாரம்பரிய மரபணு (Genes), சுற்றுப்புற சூழ்நிலை (Environment), பிறந்த இடத்தின் பருவ நிலை (Climatic Conditions), சமூக நடத்தை (Social Behaviour) ஆகியவற்றை பொறுத்து அவர்களின் செயல்பாடுகளும் பழக்க வழக்கங்களும் மாறுபடும்.

இப்படிப்பட்ட அம்சங்கள் ஒரே மாதிரியாக அமைந் திருந்தாலும் கூட, அந்த இரு நபர்களின் அழைக்கப்படும் பெயர்களில் (Nick Name / Pet Name) உள்ள எண்களுக்கேற்ப அவர்களின் செயல்பாடுகள் மட்டுமின்றி வாழ்க்கையும் மாறுபடும்.

# அனைத்து எண்களிலும் உள்ள சாதகபாதக செயல்பாடுகள்

எல்லா எண்களிலும் ஒளி மிக்க பகுதி, இருண்ட பகுதி, என, இரண்டு பகுதிகள் எப்படிப் பார்த்தாலும் அமைந்திருக்கும் என்பது பொது உண்மை.

எண்கள் என்பது அடையாளங்கள். (Symbols) ஆதலால் மனித, செயற்பாடுகளில் ஏற்ற தாழ்வுகளை அவை இயல்பான முறையில் செயற்படுத்தவே முயல்கின்றன.

எந்த ஒருமனிதன் எப்படித் தான் தன் பெயரை மாற்றினாலும் - வேறு எந்த வழியிலும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ள முயன்றாலும் அவனுக்கு எத்தனை வலிமையும், சிறப்பும் அமைகிறதோ ஏதோ ஒரு வகையில் ஒரு பலவீனமும் அவனை விட்டு விலகாமலேயே இருக்கும்.

இது இயற்கையின் நியதி. இந்த பலவீனம் போன்ற இயல்புகள் ஒரு மனிதனின் பிறப்பிலிருந்து இறப்புவரை அவனைத் தொடரவே செய்யும். ஒவ்வொரு எண்ணும் ஒவ்வொரு தனித்தன்மைகளைக் கொண்டே அமைந்

துள்ளன. ஆதலால் எந்தத் தனி எண்ணையும் நாம் குறிக்கும்போது இது மிகச் சிறந்ததென்றோ பிற எண்கள் தாழ்ந்ததென்றோ தெள்ளத் தெளிவாகத் - திட்டவட்டமாக கூற முடியாது.

எடுத்துக்காட்டாக இரண்டு நபர்களுக்கிடையே முக்கியமாக கர்ம எண் உட்பட வேறு சில எண்களிலும் ஒற்றுமை காணப்பட்டாலும் ஒவ்வொரு நபருக்கும் பிறப்பால் அமைந்த குண இயல்புகள் மாறவே மாறாது.

இந்த விடயத்தை எளிதாக விளக்குகிறேன்.

அதாவது கர்ம எண் சிறப்பும், பிறப்பு, எண் சிறப்பு வாய்க்கப் பெற்ற ஒருவர் ஒரு செயலில் மிக மும்முரமாக இயங்குகிறார் என்று வைத்துக் கொள்வோம்.

அந்த செயலின் விளைவுகள் இப்படித்தான் அமையும் என அவரால் முற் கூட்டியே கணிக்க முடியாது. அப்படிக் கணித்தாலும் அவர் எதிர்பார்த்த பலன் கிட்டுமெனச் சொல்ல இயலாது.

ஒரு தனிமனிதனை எண்கள் அடிப்படையில் முக்கியமாகக் கர்ம எண் அடிப்படையில் கணிக்க வேண்டும்; அதே வேளையில் பிற எண்களின் ஒற்றுமை



இயல்புகளையும் ஒருங்கிணைத்துப் பார்த்து தான் நாம் ஒரு தீர்க்க மான முடிவுக்கு வர முடியும்.

இந்நூலின் ஒவ்வொரு அத்தியாயத்தின் கீழும் கர்ம எண்ணின் அடிப்படையில் அந்த எண்ணில் உலகில் நடந்த அதிமுக்கிய சம்பவங்கள், அந்தக் கர்ம எண்ணில் பிறந்த உலகப் புகழ் பெற்ற கலைஞர்கள் எழுத்தாளர்கள், விஞ்ஞானிகள், அரசியல் தலைவர்கள் பற்றிய தகவல் களைத் தந்துள்ளேன்.

பொதுவில் உலகில் நடந்த மிக நல்ல, மிகத் தீய நிகழ்வுகள் அமைந்த நாட்களின் எண்கள் பற்றி எல்லாம் நான் மிகத் தெளிவாக வாசகர்களுக்கு விளக்கியுள்ளேன்.

வாசகர்களுக்கு முக்கியமாக நான் சொல்ல விரும்புவது என்ன வென்றால் ஒருவர் பிறந்தவுடன் ஒரு பெயர் சூட்டப்படுகிறது.

ஆனால் அவர் பிறரால் அவரின் இயல்புப் பெயரைச் சுருக்கியோ அல்லது வேறு விதமாகவோ அழைக்க படுகிறார்.

அப்படி அவர் எந்தப் பெயரின் மூலம் பிறரால் அதிகமாக அழைக்கப் படுகிறாரோ அதன் அடிப்படையில் தான் அவர் வாழ்வின் பலாபலன்கள் அமைகிறது.

**ஆதலால் வாசகர்கள் தத்தம் கர்ம எண்ணைச் சரியாக** அறிந்து, அவ்வெண்ணோடு ஒத்துப் போகும் பிற எண்களை பயன் படுத்தித் தத்தம் பெயரை மாற்றம் செய்து வாழ்வில் சிறப்புப் பெறலாம்.

இந்நூலை வாசகர்கள் கருத் தூன்றிப் படித்தால் அவர்கள் தத்தம் பெயரை எப்படி மாற்றி அமைத்து முன்னேறலாம் என்பதை அறியலாம்.

# எண்களைப் பயன்படுத்தும் முறை

## ஒன்றிலக்க எண் - ஓர் விளக்கம் (Single Digit / Fadic Number)

இந்நூலில் பின்வரும் அத்தியாயங்களில் எண் கணிதக்கலை பற்றிய விளக்கம் தெரிந்து - அறிந்து கொள்ள ஒருவருக்கு தேவையானவற்றை தெளிவாக எளிய முறையில் விளக்குகிறேன். வாசகர்கள் இதனை அதிக கவனத்துடன் மனதில் கொண்டு பயன்படுத்திக் கொள்ளலாம்.

எண்கலையை பயன்படுத்த தெரிந்து கொள்வதற்கு ஒருவருக்கு தேவை என்னவெனில் அனைத்து எண் களையும் சேர்த்து கூட்டி ஒன்றிலக்க எண்ணாக (Single Digit / Fadic Number) ஆக்க வேண்டும். அந்த ஒன்றிலக்க எண் 1இல் இருந்து 9 - க்குள் ஏதாவது ஒன்றாக இருக்கும்.

அதாவது 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9 என்ற ஒன்றிலக்க எண்களில் ஏதாவது ஒன்றாகத் தான் இருக்க முடியும்.

இவ்வாறு உங்களது எண்களை கூட்டி ஒன்றிலக் கத்துக்கு (Single Digit / Fadic Number) கொண்டு வந்த பின் உங்களது பிறந்த தேதி எண், கூட்டு எண் அல்லது விதி எண், கர்மஎண் ஆகியவற்றை கணித்துக் கொள்ளலாம்.

**உதாரணம்**

6 3 2 8 9 0 1 2 2

6+3+2+8+9+0+1+2+2

33 - 3+3 = 6

**பிறந்த தேதி எண் (Birth Number)**

எடுத்துக்காட்டாக ஒருவர் பிறந்தது 5.5.1975 என்று வைத்துக் கொண்டால், இதில் பிறந்த தேதி எண்5 - ஐந்து என்பது அவரது பிறந்த தேதி எண் அல்லது பொதுவான குணாதிசய எண்ணாகும்.

இந்த பிறந்த தேதி எண் ஒருவரது பொதுவான குணாதிசயங்களை வெளிக்காட்டுவது மட்டுமின்றி, அவரது கர்ம எண்ணின் ஆதிக்கத்தைப் பொறுத்து அவரது குணாதிசியங்கள் வேறு படலாம்.

மேற்கண்ட எடுத்துக்காட்டின் படி. கூட்டு எண் / விதி எண் - 5 ஆகும்.



அவரது பிறந்த தேதி எண் - 5, கூட்டு / எண் / விதி எண் - 5. மேற்படி பிறந்த தேதி எண்ணும் கூட்டு எண் / விதி எண்ணின் பலன்களை வலியுறுத்தும். அனுபவ ரீதியாக இதை நிரூபிப்பதற்கு போதுமான ஆதாரங்கள் இல்லை. இதற்குக் காரணம், பிறந்த தேதி எண்ணும், கூட்டு எண் அல்லது விதி எண்ணும் ஒரே எண்ணாக 5 என்று இருப்பது, 5 - ஆம் எண்ணுக்கு பிரத்தியேகமாக தரப்பட்ட பலன்கள் பொருந்தி வரவில்லை என்பது எனது அனுபவ ஆராய்ச்சியின் முடிவு ஆகும்.

**உதாரணமாக**

23 - 1 - 1556

திகதி எண் - 5

கூட்டு எண் - 5

ஆனால் கர்ம எண் - 2

சீனாவில் சென்சி மாநிலத்தில் ஏற்பட்ட பயங்கர பூகம்பத்தில் 830,000 பேர் இறந்தனர். சம்பவம் நடந்த நாளில் கர்ம எண் 2 ஆகும்.

மேலே குறிப்பிட்டதைப் போல பல எடுத்துக் காட்டுகளைக் காட்டலாம்.

23 - 1 - 1556.

திகதி எண் 2+3=5

விதி/கூட்டு எண்- 2+3+1+1+5+5+6

23- 2+3=5

**கா்ம எண் திகதி எண் + கூட்டு எண் X 2**

5 + 5 X 2

10 X 2 = 20

2+0 = 2

கா்ம எண்ணை கண்டறியும் விளக்கம் அடுத்த அத்தியாயத்தில்.

அடுத்த எடுத்துக்காட்டுக்காக. 5 - 10 - 1997 என்ற நாளை எடுத்துக் கொண்டால்,

திகதி எண் - 5

கூட்டு எண் - 5

கெய்றோ (Cheiro) விலிருந்து அவா் கருத்துக் களையும் பலன்களையும் அடிப்படையாகக் கொண்டு எழுதிய நூல்களின் பிரகாரம் ஏதாவது எதிர்பாராத நன்மை நடந்தே தீரவேண்டும் - 5 எண் புதன் கிரகத்தைக் குறிக்கும். சோதிட சாஸ்திரத்திலும். புதன் நல்ல கிரகமாகத்தான் கருதப்படுகிறது. இருப்பினும் கூட திகதி 5 - கூட்டு எண்ணும் 5ஆக வருகிற திகதிகளில்



வழமையாக செய்யும் கருமங்களில் கூட இடையூறுகள் ஏற்படுகின்றன. இந்த 5-எண், எந்த எண்ணில் பிறந்த எவருக்குமே நன்மை பயக்கக் கூடியது என்பது எண் சாஸ்திரத்தின் கணிப்பு.

இன்னும் ஓர் எடுத்துக்காட்டாக, 3 - 5 - 2000 மற்றும் 1 - 1 - 2000 நாட்களை எடுத்துக் கொண்டால், மேற்கண்ட இரு தினங்களுக்கும் முறையே திகதி எண்.3. கூட்டு எண் ஒன்றாகவும், திகதி எண் 1. கூட்டு எண் மூன்றாகவும் வரும். எண் சாஸ்திரத் தத்துவப்படி 1 எண் சூரியனாலும் 3 எண் வியாழன் என்னும் சுபகிரகத்தாலும் பிரதிநிதித்துவப்படுகிறது. மிக்க சாதகமான பலன்களை செய்யும் என்பது எண்கணிதத்தின் தத்துவம். ஆனால் இப்படி 1, 10, 19, 28 தேதிகளில் திகதி மாதம் ஆண்டு முதலியவற்றை கூட்ட வரும் எண் 3 ஆக அமைந்தால் அல்லது 3, 12, 21, 30 தேதிகளில் கூட்டு எண் 1 ஆக அமையும் நாட்களில் எதிர்பாராத விபரீத கெட்ட நிகழ்வுகள் தனி மனிதனுக்கு மட்டுமல்ல உலகளவில் பாரிய அளவில் விபத்துக்கள், பூகம்பங்கள், முக்கிய உலக பிரமுகா்கள் இறப்பது போன்ற சம்பவங்கள் வழமையாக நடக்கும், உள் நாட்டு பிரச்சனைகளிலும் அதிக பொருள் சேதம் உயிரிழப்பு என பலவிதமான பிரச்னைகளும், இறப்புகளும் நடந்ததை ஆதாரபூா்வமாக நான் ஆராய்ந்து எடுத்ததன் முடிவே இந்த கா்ம எண்.

தேதி எண் 1 ஆக இருந்து கூட்டு எண் 3 ஆக இருந்தாலும் சரி தேதி எண் 1 ஆக இருந்து கூட்டு எண்

3 ஆக இருந்தாலும் கர்ம எண் 8. இந்த எண் சனியின் ஆதிக்கத்துக்குட்பட்டதாகும். சனீஸ்வரன் தனது குணாதிசயங்களை தவறாமல் நிகழ்த்தக் கூடியவன். சனீஸ்வரனைப் பற்றியும் அவனது குணாதிசயங்களைப் பற்றியும் கர்ம எண் -8 என்ற பின்வரும் அத்தியாயங் களில் இந்த நூலில் விபரமாக தெரிந்து கொள்ளலாம்.

**உதாரணம்**

**INDIRA GANDHI** பிறந்த தினம் 19-11-1917

திகதி எண் : 19 - 1 + 9 = 10

1+0=1

கூட்டு/விதி எண்: 1+9+1+1+1+9+1+7

30 - 3+0=3

கர்ம எண் - 8

கர்ம எண் 8ஐ எப்படி கணித்துக் கொள்வது பற்றிய குறிப்பு அடுத்த அத்தியாயத்தில்.

# கர்ம எண்ணைக் கண்டறியும் முறை

**எடுத்துக்காட்டாக, ஒருவர் பிறந்த நாள் 5.5.1975. இதிலிருந்து**

**1. பிறந்த தேதி எண்: - 5**

**2. மாத எண் : - திகதி எண் + மாத எண்**
**5 + 5 = 10**
**1+0=1**

**3. வருஷ எண்:- தேதி எண் + வருடம் எண்**
**5+1+9+7+5=27**
**2+7=9**

**4. கூட்டு/விதி எண்:-**
**திகதி எண் + மாத எண் + வருஷ எண்**
**5+5+1+9+7+5=32**
**3+2=5**

**5. கர்ம எண்:-**
**திகதிஎண்+மாதஎண்+ வருஷஎண்+ கூட்டு எண்**
**5+1+9+5=20**
**2+0=2**

**கர்ம எண்ணை சுலபமாக கண்டறிய இலகுவான முறை**

**பிறந்த தேதி எண்+ கூட்டு/விதிஎண் X 2**

**5 + 5 X 2 = 20**

**2+0 = 2**

**மேற்கண்ட எடுத்து காட்டின்படி, பிறந்த எண் 5 ஐந்தினை கூட்டு எண் அல்லது விதி எண் 5 ஐந்துடன் கூட்டி (+) இரண்டினால் (2) பெருக்கவும் (X) இதுவே கர்ம எண்ணை இலகுவாக கண்டறியும் முறையாகும்.**



## கிழமைகளுக்கு உரிய எண்கள்

| | |
|---|---|
| ஞாயிறு | 1-4 |
| திங்கள் | 2 - 7 |
| செவ்வாய் | 9 |
| புதன் | 5 |
| வியாழன் | 3 |
| வெள்ளி | 6 |
| சனி | 8 |

## கிரகங்களுக்கு உரிய எண்களும் கிழமைகளும்

| | | |
|---|---|---|
| சூரியன் | 1 | ஞாயிறு |
| சந்திரன் | 2 | திங்கள் |
| வியாழன் | 3 | வியாழன் |
| யுரேனஸ் / இராகு | 4 | ஞாயிறு |
| புதன் | 5 | புதன் |
| வெள்ளி | 6 | வெள்ளி |
| நெப்டியூன் / கேது | 7 | திங்கள் |
| சனி | 8 | சனி |
| செவ்வாய் | 9 | செவ்வாய் |

# கர்ம எண் - 1 - சூரியன்

## KARMIC NUMBER - 1 (SUN)

சூரியன் இல்லாமல் உலகத்தில் எதுவுமே இயங்காது என்பது அனைவரும் அறிந்ததே. சூரியனைப் பற்றி நான் இங்கு அதிகமாக வாசகர்களுக்கு விளக்க வேண்டும் என்பதில்லை.

அவரால் (சூரியனால்) குறிக்கப்படும் எண்.1

சோதிட சாஸ்திரத்தில் சூரியன் - அசுப / கெட்ட (Natural Malefic) கிரகம் என்றும், கெடுதல் விளைவிக்கும் தீய கிரகம் என்றும் கூறப்படுகிறது. அனைத்துமே இயங்குவதற்கு சூரியன் அவசியம். சூரியன் இன்றி உலகில் எந்த உயிரும், செடியும், கொடியும், மரமும், எந்த அணுவும் கூட அசையாது - இயங்காது என்பது மறுக்க முடியாத உண்மை. ஒருவருக்குக் கரும எண் 1ஆம் எண்ணில் அமைந்தால் அவர் வாழ்கை மிகச் சிறப்பாக அமையும் என்பது எனது ஆய்வில் மூலம் நான் கண்டறிந்த உண்மையாகும்.

| பிறந்த தேதி எண் | கூட்டு / விதி எண் | கர்ம எண் |
|---|---|---|
| 1, 10, 19, 28 | 4 | 1 |
| 2, 11, 20, 29 | 3 | 1 |
| 3, 12, 21, 30 | 2 | 1 |
| 4, 13, 22, 31 | 1 | 1 |
| 5, 14, 23 | 9 | 1 |
| 6, 15, 24 | 8 | 1 |
| 7, 16, 25 | 7 | 1 |
| 8, 17, 26 | 6 | 1 |
| 9, 18, 27 | 5 | 1 |

மேற்குறிப்பிட்ட கர்ம எண்-1க்கு உரிய குணாதி சயங்கள்:

திறந்த மனதுக்குச் சொந்தக்காரர் - ஆடம்பரப்பிரியர் - யதார்த்தவாதி - மதி நுட்பம் மிக்கவர் - கடமை, கண்ணியம் நேர்மை கொண்டவர் - பண்பாட்டுப் பிரியர் - துணிவு மிக்கவர் - வெற்றியாளர் - சுதந்திரப் பிரியர் - அடிமைத் தனத்தை வெறுப்பவர் - சகலகலா வல்லவர் மற்றும் ரசிகர் - சிறந்த அறிவாளி - கடுமை யான உழைப்பாளி - பேராசையற்றவர் - புகழ் விரும்பி - நல்ல பேச்சாளர் - அரசியல் உயர் பதவியாளர் - சிறந்த நிர்வாகி - பிறரை எடை போடுவதில் வல்லவர் - சாஸ்திரப் பிரியர்



- மேதா விலாசமிக்கவர் - வெளிநாட்டு பயணங்களில் ஆர்வம் கொண்டவர் - என்று கர்ம எண்1-க்கு உரியவர்களின் பொது குணாதிசயங்களை குறிப்பிடலாம்.

சூரியனின் ஆதிக்கம் குறைவாக இருந்தால் கர்ம எண் 1க்கு உரியவர்கள் கண்பார்வை பாதிக்கப்பட்டு கண்ணாடி அணிய நேரிடலாம்.

இவர்களுக்கு இரத்த அழுத்த நோய், இருதய நோய் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது.

இவர்களுக்கு பெரும்பாலும் காதல் திருமணம் கைகூடலாம். வாழ்க்கை துணையாக வருபவர் அங்க அவய லட்சணம் பொருந்தியவராக இருப்பார்.

வாழ்க்கையில் அசையாத மன உறுதியுடன் கூடிய நம்பிக்கையுடன் முன்னேறி செல்வர்.

நட்பிற்கு உகந்தவர்களாக விளங்குவர். இவர்களுக்கு மனவலிமை அதிகம்.

இவர்கள் நகைச்சுவை உணர்வு மிக்கவர்கள். உணவு சம்பந்தப்பட்ட விஷயங்களில் கட்டுப்பாடு உடையவர் களாக இருப்பார்கள்.

இவர்களிடம் எதையும் எளிதில் புரிந்து கொள்ளும் ஆற்றல் அதிகமாக இருக்கும்.

பெயரின் அடிப்படையிலும் கர்ம எண்ணின் அடிப்படையிலும் எண்-1 அமைந்தவர்கள் வாழ்க்கையில் எல்லா வகைகளிலும் சிறந்து விளங்குவார்கள்.

இந்த எண்ணில் பிறந்தவர்கள் சத்தியத்திற்கும் உண்மைக்கும் தர்ம நெறிக்கும் கட்டுப்பட்டே நடப்பார்கள்.

எச் செயலிலும் தெளிவான சிந்தனை செய்தே இறங்குவார்கள். வெற்றி பெறுவார்கள்.

யாருக்கும் பயந்து 1ஆம் எண்காரர்கள் வாழ மாட்டார்கள்.

உள்ளொன்று வைத்துப்புறமொன்று பேசும் இயல்பு இவர்களிடம் கிடையாது.

எந்த விஷயத்தையும் நேருக்குநேர் பேசுவார்கள்.

இந்த எண்காரர்களின் குணாதிசயமே ஏராளமான நண்பர்களை இவர்களுக்குச் சம்பாதித்துக் கொடுக்கும்.

1-ஆம் கர்ம எண்காரர்களுக்கு மானம் ''பிரதானம்'' தமக்கு கௌரவக் குறைவு ஏற்படும் பட்சத்தில் தாம் எந்த பெரிய மகுடத்தைச் சூட்டிக் கொண்டிருந்தாலும் அவற்றை கழற்றி எறியத் தயங்க மாட்டார்கள்.

சுதந்திர மனப்பான்மையோடு தான் இந்த எண் காரர்கள் வாழ்வார்கள்.



எந்த விடயத்தின் முக்கிய அம்சங்களையும் மிகச் சுலபமாக இவர்கள் தமது நுண்ணறிவால் அறிந்து கொள்வார்கள்.

ஆதலால் எந்தக் கலைகள் பற்றியும் பொது விஷயங்கள் பற்றியும் நுட்பமாகப் பேசி மற்றவர்களை வியப்பில் ஆழ்த்துவார்கள். கர்ம எண் 1 உடையவர்கள் பலரோடு பழகுவார்கள். ஆனால் சிலரையே நண்பர்களாக கருதி நம்புவார்கள்.

கலைத்துறை, இலக்கியத்துறை, அரசியல் துறை போன்றவற்றில் மிகப்பிரபலம் பெற்றவர்களில் அதிகம் இந்த 1-ஆம் எண்காரர்களே

சூரியனுடைய ஆதிக்க சக்தி மிகுந்த 1-ஆம் எண் காரர்களுக்கே நான் மேற் சொன்ன விஷயங்கள் பொருந்தும்:

சூரிய ஆதிக்கம் குறைந்தவர்களோ ஊதாரிகளாக வும், தம்மைப் பற்றி தம்பட்டம் அடிக்கும் போக்கோடும் வாழ்ந்து எதிலுமே தோல்வி காண்பர்.

சூரியனின் ஆதிக்கம் எந்த அளவு ஒருவருக்கு பலன் அளிக்கும் என்பதை கரும எண் 1 வரும் நாட்களில் அல்லது அதனுடைய நட்பு கர்ம எண்களில் நடக்கும் நல்ல கெட்ட பலன்களை வைத்து அறிந்து கொள்ளலாம்.

சோதிட சாஸ்திர கிரக நிலைப்படி சூரியன் உச்சம், ஆட்சி, நீசம், பகை, நட்பு, சமம் ஆகிய நிலைப்பாட்டை வைத்தோ அல்லது குறிப்பிட்ட இலக்கினத்தில் பிறந்த ஒருவருக்கு அது யோக காரகனா என்பதை வைத்தோ சூரியனின் ஆதிக்கம் எந்த அளவு ஒருவருக்கு பலன் அளிக்கும் என்பதை எளிதில் அறியலாம். அத்துடன் சூரியனிருக்கும் இராசி சுபக் கிரகங்களின் பார்வை பெற்றதா என்பதை வைத்தும் அறியலாம்.

ஆனால் எந்த நிலை வந்தாலும் வஞ்சக இயல்போடு இவர்கள் மற்றவர்களுக்கு கேடு நினைக்க மாட்டார்கள்.

சூரிய ஆதிக்கம் குறைந்த 1-ஆம் எண்காரர்கள் பெயர் எண்களை சரியாக அமைத்துக் கொண்டால் வாழ்வில் விரைவாக வெற்றிகளைச் சந்திக்க முடியும்.

ஒருவருக்கு சூரிய ஆதிக்கம் உச்ச நிலையிலா, மத்திய நிலையிலா குறைந்த நிலையிலா உள்ளது என்பதை வாசகர்கள் தத்தம் ஜாதகக் குறிப்புகளைக் கொண்டு இலகுவாக அறிந்து கொள்ளலாம்.

சூரியன் மேடத்தில் உச்சம், சிங்கத்தில் ஆட்சி, துலாத்தில் நீசம்.

இதைவிட அவரவர் இலக்கினத்தைக் கொண்டு சூரியன் அந்த ஜாதகளுக்கு யோக காரகனா என்பதை எளிதில் அறியலாம்.



ஏற்கனவே நான் கூறிய கருத்து சோதிடப் பிரகாரம் பிறந்த தேதியிலோ, பெயரிலோ ஒருவருக்கு எத்துணை எண்கள் அமைந்திருந்தாலும் அவற்றை ஒன்பது எண் களுக்குள் அமைந்த ஒற்றை எண்ணுக்குள் கொண்டு வர வேண்டும்

1-ஆம் எண்ணைக் கர்ம எண்ணாகக் கொண்டவர் கள் இயல்பாகவே காதல் புரிந்து திருமணம் செய்யும் தன்மை மிக்கவர்கள்.

பொதுவில் பிறந்த தேதி, மாதம், வருடம் மூன்றையும் கூட்ட வந்த தொகை 1,4,8 என்றிருந்தால் 1 என்று அமைகிற கர்ம எண் முழுமையான பலனைக் கொடுக்கும்.

குறிப்பிட்ட சில கர்ம எண்களில் பிறந்தவர்களைத் தவிர ஏனைய கர்ம எண்களின் ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் 1இல் அமையும் பெயரை வைத்துக் கொண்டால் வாழ்வில் சில நல்ல மாற்றங்களைச் சந்திக்க நேர்ந்தாலும், பல சிக்கல்களையும் கண்டிப்பாகக் காணவே செய்வர்.

குடும்ப வாழ்வு கூட மனத்திற்கு முழுமையாக நிறைவு தரும்படி அமையுமெனக் கூற முடியாது.

**ஆங்கில எழுத்திற்குரிய எண்கள்**

| | | |
|---|---|---|
| A , I , J , Q , Y | - | 1 |
| B , K , R | - | 2 |
| C , G , L , S | - | 3 |
| D , M , T | - | 4 |
| E , H , N , X | - | 5 |
| U , V , W | - | 6 |
| O , Z | - | 7 |
| F , P | - | 8 |

## பெயர் எண் 1

பெயர் ஒன்றில் முடியும் எண்களின் பொதுக் குணாதிசயங்களைப் பார்ப்போம்: -

எடுத்துக்காட்டாக, 10 எண்ணை எடுத்துக் கொள்வோம்.

இது அதிர்ஷ்ட சக்கரத்தைப் பிரதி பலிக்கும் ஒரு எண் என்று சொல்லலாம். இந்த எண் பெயரில் அமைந்தவர்கள் தன்னம்பிக்கை, சமூகத்தில் உயர்ந்த மரியாதை, கண்ணிய இயல்புகள் இவற்றோடு விளங்குவார்கள்.



இவர்களுடைய ஆசைகள் சரியான திசையில் செல்லுமானால் வாழ்க்கையில் இலகுவாக வெற்றி மகுடங்களை இவர்களால் சூட்டிக் கொள்ள முடியும்.

இனி எண் 19 பெயர் எண்ணாக வந்தால் அவர்கள் சூரியனின் முழுமையான ஆதிக்கத்திற்கு உட்படுகிறார்கள்.

இவர்களுக்கு இவர்கள் நாடும் சுகபோகங்கள் மிக எளிதாகக் கைகூடுவதால் இந்த எண் உள்ளவர்களை ''சொர்க்கத்தின் பிரஜைகள்'' என்று கூறலாம்.

ஒன்றில் அமையும் பெயர்கள் சிறப்புடையதாக இருந்தாலும் 28 எண்ணைப் பொறுத்தவரை இதை மிக உயர்ந்த பலன்களை வழங்கும் எண் எனக் கூற முடியாது.

இந்த எண் உடையோர்க்கு நன்மை போல் தோற்றமளிப்பதும் திடீரென தீமையாகி விடும்.

இவர்கள் தமக்கு கிடைக்கும் வசதிகளை சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஊதாரித்தனமாக இவர்க்ள வாழ முற்பட்டால் பிற் காலத்தில் பல கஷ்டங்களுக்கு உள்ளாக வேண்டி வரும்.

இவர்களுக்கு பிறரை நம்பி ஏமாறும் இயல்பு உண்டு.

அதே வேளையில் ஒரு செயலில் ஈடுபட்டு வரும் போது அதற்குப் போட்டியாகப் பலர் கிளம்பி இடையூறு செய்ய முற்படுவார்கள்.

பொதுவில் இவர்களுக்கு பல எதிரிகள் மிக எளிதாக தோன்றுவார்கள்.

இவர்கள் சட்டத்தின் பார்வையில் குற்றவாளிகளாகக் கருதப்பட்டு மான நஷ்டமும், பண நஷ்டமும் அடையும் வாய்ப்புகளும் அதிகமாகவே இருக்கும்.

இவர்கள் எந்த தொழிலையும் உறுதியோடு செய்ய மாட்டார்கள்.

இருப்பதை விட்டு விட்டுப் பறப்பதற்கு ஆசைப்பட்டு பல தோல்விகளுக்கு உள்ளாவார்கள்.

இந்த 28 எண்ணுடையோர்க்கு எதிர் காலம் முன்னேற்றமும் சுபீட்சமும் மிக்கதாக அமைய வாய்ப்புகள் இல்லை என்றே சொல்லலாம்.

28எண் அமைந்தோர் தமது பெயரை பிறந்த தேதி எண், கூட்டு எண், முக்கியமாக கர்ம எண் இவற்றுக் கேற்றவண்ணம் சாதகமாக மாற்றிக் கொண்டால் எதிர் காலத்தை கண்டிப்பாக மிகச் சிறப்பாக அமைத்துக் கொள்ள முடியும்.

இனி 37ஆம் எண்ணைப் பற்றிப் பார்ப்போம். இந்த எண்காரர்களை அதிர்ஷ்ட தேவதையின் பிள்ளைகள் என்றே கூறலாம்.

இவர்களுக்கு வாழ்க்கையானது தொட்டது எல்லாம் துலங்கும் வண்ணம் அமையும்.



இந்த எண்கொண்ட ஆடவர், பெண்டிர் இரு பாலருக்குமே மிகச் சிறப்பான பலனைத் தரும்.

காதல் வாழ்க்கை வெல்லும். எல்லா கனவுகளும் பலிக்கும். நல்ல நண்பர்கள் தேடி வருவார்கள்.

ஆங்கிலக் கவிஞன் கோல்ரிட்ஜ் ஒரு கவிதையில் சொல்வது போல் ''வாழ்வே திருவிழா'' என்பது இந்த 37 எண்ணுடையோர்க்கு மிகப் பொருத்தமான ஒன்றாகும்.

இனி 46 எண்ணின் பலாபலன்களைப் பார்ப்போம்.

இந்த எண்ணுடையோர் மிகவும் தெளிவான சிற்தனை களோடு மன உறுதியோடு செயல்பட்டால் வாழ்க்கையில் வெற்றிச் சிகரங்களைத் தொடலாம். இவர்களுக்கு நல்லறிவு என்பது கூடப் பிறந்த ஒன்றாகும். அதை மிகச் சரியான வகையில் இவர்கள் பயன்படுத்த வேண்டும்.

இந்த எண் உடையோர் மிகச் சாதாரண பின்னணியைக் கொண்டவர்களாக இருந்தாலும் தமது எண் பலத்தால், அறிவை பயன்படுத்தும் முறையால் வாழ்க்கையில் நினைத்ததை நடத்தி முடிக்கலாம்.

55-எண்ணைப் பற்றிப் பார்ப்போம். ஆக்க சக்தி, அழிக்கும் சக்தி ஆகிய இரு குணங்களைக் கொண்டது.

சரியான முறையில் அறிவைப் பயன்படுத்தினால் இந்த எண்ணுடையோர் வெற்றி மேல் வெற்றி பெறுவர்.

சமூகமே இவர்களுடைய ஞானத்திற்கு மதிப்பளித்து உச்சி மேல் வைத்துக் கொண்டாடும்.

64 எண் இயல்பை இனிப் பார்ப்போம். இந்த எண் கொண்டோர்க்கு எதையும் சாதிக்கும் மனத்திடமும் தெளிவான அறிவும் ஒட்டிப் பிறந்திருக்கிறது.

இவர்களை நெருப்போடு நாம் ஒப்பிடலாம். தகுந்த முறையில் நிதானமாக சிந்தித்து இவர்கள் காரியங்களைச் செய்ய முற்பட்டால் இலகுவில் வெற்றிக் கனிகளை வாழ்க் கையில் பறிக்கலாம். நாவடக்கம் இன்றி ஆத்திரப்பட்டால் நட்பும் பகையாகி வாழ்வே அலங் கோலமாகி விடும்.

73-எண் பற்றிப் பார்ப்போம். இந்த எண்காரர்கள் இன்பம் எங்கே என்று தேடித் தேடித் திரிவார்கள். வசதிகள், பிறரை ஆட்சி செய்யும் போக்குகள் இவர்களுக்கு உண்டு.

சத்தியத்தின் நிழலில் நின்றால் இவர்கள் வாழ்க்கை என்றென்றும் சந்தோஷம் மிக்கதாக இருக்கும்.

சத்தியம் தவறி குறுக்கு வழியில் போனால் வாழ்க்கை இவர்களுக்கு தோல்வி மயமாகும்.

அடுத்த 82 எண் பற்றிச் சொல்கிறேன்.

இந்த எண்ணில் பெயர் உடையோர் மன்னன் போல் மண்ணில் சகல சுக போகங்களையும் பெறுவர்.



பல வெற்றிமாலைகள் இவர்களை எப்பொழுதும் அலங்கரிக்கும். இவர்கள் கண் நோக்கே பிறரை வசப்படுத்தி விடும்.

தகுந்த முறையில் தம் அறிவைப் பயன்படுத்தினால் பல அற்புதங்களை இவர்கள் வாழ்வில் காண்பார்கள்.

இனி 91-ஆம் எண் பற்றிச் சொல்லுகிறேன். மலையே தலையில் விழுந்தாலும் அசையாத உறுதிமிக்கவர்கள் இவர்கள்.

இவர்கள் ஓரிடத்தில் நில்லாது வாழ்க்கையில் பல பல இடங்களுக்குப் பறந்து கொண்டே இருப்பார்கள்.

இன்பத்தின் மடியில் இவர்கள் காலம் நடக்கும்.

ஞானமார்க்கமும் இவர்களுக்கு எளிதாக வசப்படும்.

## *எண்கணித சோதிடத்தில் - கர்ம எண் 1*
## KARMIC NUMBER - 1

### Examples

1. Ceylon became a self-governing dominion within the Commonwealth, having been a British Crown Colony since 1802.

**Date of event: 4-2-1948**

**4 - 1 - 1**

திகதி எண் : 4
விதி எண் : 1
கர்ம எண் : 1

2. Sir Alec Guinness, English actor and Oscar winner in 1957. born at marylebone in London.

**Date of birth: 2 - 4 - 1914**

**2 - 3 - 1**

திகதி எண் : 2

விதி எண் : 3

கர்ம எண் : 1

3. Bette Davis, American Film actress and twice Oscar winner, born at Lowell in Massachusetts.

**Date of birth: 5 - 4 - 1908**

**5 - 9 - 1**

திகதி எண் : 5

விதி எண் : 9

கர்ம எண் : 1

4. Bertrand Russell, British philosopher and mathematican, born at Ravenscroft near Trelleck, Monmouthshire in wales.

**Date of birth: 18 - 5 - 1872**

**9 - 5 - 1**

திகதி எண் : 9

விதி எண் : 5

கர்ம எண் : 1

5. The construction of the Berlin wall by the Russians began, separating East and West.

**Date of event: 17 - 8 - 1961**

**8 - 6 - 1**

திகதி எண் : 8

விதி எண் : 6

கர்ம எண் : 1



6. Theodore Roosevelt, American Republican statesman and 26th President, born in New York City, the son of a collector of the port.

**Date of birth: 27 - 10 - 1858**

**9 - 5 - 1**

திகதி எண் : 9

விதி எண் : 5

கர்ம எண் : 1

7. Ceylon became the Republic of Sri - Lanka within the common wealth.

**Date of event: 22 - 5 - 1972**

**4 - 1 - 1**

திகதி எண் : 4

விதி எண் : 1

கர்ம எண் : 1

8. India became independent with padit Nehru its first prime Minister.

**Date of event: 15 - 8 - 1947**

**6 - 8 - 1**

திகதி எண் : 6

விதி எண் : 8

கர்ம எண் : 1

9. Prince William (Arthur Philip Louis) born in London to the Prince and Princess of Wales.

**Date of birth: 21 - 6 - 1982**

**3 - 2 - 1**

திகதி எண் : 3

விதி எண் : 2

கர்ம எண் : 1

10. James Cagney, American film actor, dancer and Oscar winner, born in New York City.

**Date of birth: 17 - 7 - 1899**

**8 - 6 - 1**

திகதி எண் : 8

விதி எண் : 6

கர்ம எண் : 1

11. Woody Allen, American comedian, born at Brooklyn, New York, as Allen stewart Konigsberg.

**Date of birth: 1 - 12 - 1935**

**1 - 4 - 1**

திகதி எண் : 1

விதி எண் : 4

கர்ம எண் : 1

# கர்ம எண் - 2 (சந்திரன்)

## KARMIC NUMBER - 2 (MOON)

| பிறந்த தேதி எண் | கூட்டு / விதி எண் | கர்ம எண் |
|---|---|---|
| 1, 10, 19, 28 | 9 | 2 |
| 2, 11, 20, 29 | 8 | 2 |
| 3, 12, 21, 30 | 7 | 2 |
| 4, 13, 22, 31 | 6 | 2 |
| 5, 14, 23 | 5 | 2 |
| 6, 15, 24 | 4 | 2 |
| 7, 16, 25 | 3 | 2 |
| 8, 17, 26 | 2 | 2 |
| 9, 18, 27 | 1 | 2 |

இது சந்திரனுக்கு உரிய எண் ஆகும்.

கர்ம எண் 2இல் பிறப்போர் அனைவரும் சந்திரனுடைய ஆட்சிக்குள் இருப்பவர்கள்.

சமூகத்தில் செல்வாக்கின் உச்சியிலும், அதே வேளையில் தீயோர் என்ற பேர் சார்ந்தும் வாழ்வார்கள்.

பொதுவாக சந்திரன் ஆட்சிக்கு உட்பட்டவர்கள் எப்பொழுதும் கற்பனை உலகில் சஞ்சரித்துக் கொண்டிருப்பார்கள்.

எதை எதைப் புதிதாக சாதிக்கலாம் என இவர்கள் மனம் எப்பொழுதும் துடிதுடித்துக் கொண்டிருக்கும்.

இவர்கள் அலைந்து கொண்டிருக்கும் மனவேகத்தை அடக்கி உறுதியான தெளிவான முடிவுகளை மேற் கொண்டு வாழ முற்படுவார்களேயானால் கண்டிப்பாக இவர்களால் நினைத்ததைச் சாதிக்க முடியும்.

தன்னைக் காட்டிலும். இன்னும் ஒரு பெரிய சக்தியின் - அது கடவுளோ வழி காட்டியோ அந்த நம்பிக்கையை சார்ந்து வாழ்ந்தால் மட்டுமே இவர்களால் கருதிய கருமத்தை வெற்றிகரமாகச் சாதிக்க இயலும்.

பிறரையும் நம்பாது, ஏன் தம்மையே நம்பாத விசித்திரப் போக்குடையவர்கள் இவர்கள்.

தம்மால் தனித்து அதைச் செய்யலாம், இதைச் செய்யலாம் என்று அகலக்காலை வைத்து மண் கவ்வும் அனுபவங்கள் இவர்கள் வாழ்வில் ஏராளமாக அமையும். சந்தேகம் இவங்களின் உடன் பிறப்பாகும்.

நான் ஆரம்பத்தில் கூறியது போல் சந்திரனின் கர்ம எண் ஆட்சிக்கு உட்பட 2-ஆம் எண் காரர்கள் மனத்தை



திடப்படுத்தி உயர்ந்த சக்திகளுக்குக் கட்டுப்பட்டு சரியான திட்டங்களை வகுத்து அயராது உழைப்பார்களே யானால் நிச்சயமாக, உறுதியாக இந்த எண்காரர்கள் வாழ்க்கை மிகவும் பயனோடு அமையும்.

அப்படி வாழ்வை இவர்கள் நெறிப்படுத்தாவிட்டால் தமது சந்தேக புத்தியால் - உறுதியற்ற மனப் போக்கினால் திருமண வாழ்விலும் நிம்மதி இழந்து, சிறந்த நண்பர்களையும் இழந்து தவிக்க நேரிடும்.

கர்ம எண் 1,2,4,7,8 எண்ணுடையோர் பரிவு இவர்களுக்கு அமையும் வாய்ப்புண்டு என்பதையும் இங்கு சுட்டிக் காட்ட வேண்டும்.

சந்திர ஆதிக்கத்தின் பலனை ஒருவர் கிரக நிலையிலிருந்து அறிவது மிகச் சுலபம். சந்திரன் மனத்தை ஆழும் கிரகம். சந்திரனுக்கும் சனீஸ்வரனுக்கும் ஏதாவது சம்பந்தமிருப்பினும் சரி - அல்லது கிரக நிலை அமைப்பில் சந்திரன் மறைவு ஸ்தானத்திலிருந்தாலும் சரி - இப்படிப் பட்டவர்களுக்கு எந்த விடயத்திலும் ஒரு தீர்க்கமான முடிவை எடுப்பது கடினம். மனம் எந்நேரமும் சஞ்சலப் பட்டுக் கொண்டேயிருக்கும் - கர்ம எண் 2 ஆக வருபவர்கள் கிரக நிலைப்படி சந்திரனின் பலம் உச்சமாக, ஆட்சியாக அல்லது வியாழனின் பார்வை பெற்று இருப்பினும் சரி, பெயரெண்ணை கட்டாயமாக 1ஆம்

பெயர் எண்ணில் கீழ் தரப்பட்டிருக்கும் நல்ல பலனளிக்கும். ஓர் எண்ணை தேர்ந்தெடுத்து தமக்குச் சாதகமாக மாற்றிக் கொள்வது நிச்சயம் பலனளிக்கும். மற்றைய பிறப்பு எண், கூட்டு எண் எதுவாக வரினும் சூரியனின் எண் ஒன்றே இவர்கள் வாழ்வில் முன்னேற்றத்தையும் சந்தோஷத்தையும், கொடுக்க வல்லது என்பது எனது அனுபவத்தில் கண்ட உண்மை.

## பெயர் எண் 2

எண் - 11: இந்த எண் பெயராக அமைந்தோர்க்கு பிறரை நம்பி மோசம் போகும் வாய்ப்பு மிக அதிகம். யாரை நம்பலாம் என்று தெளிவான முடிவெடுத்து மனச்சஞ்சலமின்றி இவர்கள் செயல்பட்டு வெற்றி காணலாம். மற்றவர்களை விழிப் படைய வைத்து அவர்களை தன்பக்கம் ஈர்க்கும் சக்தி இந்த எண் அமைந்தோர்க்கு உண்டு. ஆனால் சுயநலப் போக்கில் இவர்கள் செல்வார்களேயானால் வாழ்வில் தோல்வியும், அவமானமுமே மிஞ்சும்.

எண 29: இந்த எண்காரர்களின் குடும்ப வாழ்க்கைச் சுமூகமானதாக இல்லை.

சினேகிதர்களும் இவரைச் சார்நதவர்கள் என்று நம்பும் நபர்களும் இவரை விட்டு விலகிச் செல்வர்.



சட்ட சிக்கல்கள் பல தோன்றி இவர்களை ஆட்டிப் படைக்கும்.

எண் 38: இவர்கள் கண்ணியவான்கள். நேர்மையாக உழைத்துச் சம்பாதிப்பார்கள்.

நேற்று ஆண்டி போல் இருப்போரும் இன்று அரச கீர்த்திகள் பெற வாய்ப்புகள் அமையலாம்.

ஆனால் தீயோரால் பல கஷ்டங்கள் அடையக் கூடிய வாய்ப்புகளும் உண்டு.

எண் 47: இந்த எண் கொண்டோர் மிக வேகமாக சம்பாதித்து முன்னேற்றம் அடைவார்கள்.

குறிப்பிட்ட நோய்களால் இவர்கள் பாதிக்கப் படும் வாய்ப்புகளும் அதிகம்.

எண் 56: இவர்கள் திடீரென முன்னேறுவார்கள். விந்தைச் செயல்கள் பல புரிவார்கள். ஆனால் மேலேறிய வேகத்திலேயே மிகப் பெரிய சரிவைச் சந்திக்கும் சந்தர்ப்பங்களும் அதிகம் உண்டு.

எண் 65: இந்த எண்காரர்களுக்கு நல்லவர்கள் நட்பு அமையும். இவர்கள் ஆன்மிகப் பாதையில் நாட்டம் கொண்டவர்கள்.

எண் 74: துன்பம் எப்போதும் இவர்களை நெருங்கி வரும். ஏழ்மை தோழமை கொள்ளும்.

ஆனால் இயல்பாக ஆன்மிகப் பாதையில் நடைபோடும் இவர்கள் அந்தப் பாதையில் உறுதியோடு போய் அமைதி தேடலாம்.

எண் 83: இந்த எண் காரர்கள் மண்ணிலேயே சொர்க்க சுகத்தைக் காண்பார்கள்.

சமூக செல்வாக்கு இவர்களுக்கு தகுந்த முறையில் கிடைக்கும்.

எண் 92: இந்த எண்ணுடையோர் ஞானமார்க்கத்தின் மூலம் மேலான நிலை காணலாம்.

சுக போகங்களும் இவர்களைத் தேடி வரும்.

எண் 101: இது எந்த வகையிலும் பெரிய முன் னேற்றத்தைத் தரக்கூடிய ஒரு எண் அல்ல.

கர்ம எண் 2இல் அமையும் எண்காரர்களுக்கு தேதி 7 அல்லது கூட்டு எண் 7 வரும் நாட்கள் நன்மை தரும். கர்ம எண் 7இல் அமைந்தவர்களை திருமணம் செய்தால் வாழ்வு வளம் பெறும்.

முக்கிய குறிப்பு ஒன்றினை வாசகர்களுக்கு நான் சொல்ல வேண்டும். கர்ம எண் 2-இல் பெயர் அமையப் பெற்றவர்கள் உடனடியாக தமது பெயரை பெயர் எண் 1 என வரும்படி மாற்றி அமைத்துக் கொள்வது மிகமிக அவசியம்.

அப்படி மாற்றினால் அவர்களது வாழ்வில் குறிப்பிடத்தக்க மாற்றம் நிகழும் என்பது நிச்சயம்.



## எண்கணித சோதிடத்தில் - கர்ம எண் 2

## KARMIC NUMBER - 2

**Examples**

1. Charles de Gaulle, French soldier, Statesman and President, born at lille.

   **Date of birth: 22 - 11 - 1890**

   **4 - 6 - 2**

   திகதி எண் : 4

   விதி எண் : 6

   கர்ம எண் : 2

2. An Earthquake took place in the Shensi Province of China killing an estimated 830 000 people.

   **Date of event: 23 - 1 - 1556**

   திகதி எண் : 5

   விதி எண் : 5

   கர்ம எண் : 2

3. Kevin keegan, English international footballer, born at Amthorpe in Yorkshire, the son of a miner.

**Date of birth: 14 - 2 - 1951**

திகதி எண் : 5

விதி எண் : 5

கா்ம எண் : 2

4. Steve McQueen, American actor in action - adventure films, born at Indianapolis in Indiana.

**Date of birth: 24 - 3 - 1930**

திகதி எண் : 6

விதி எண் : 4

கா்ம எண் : 2

5. Pandit Nehru, statesman and first Prime Minister of India on its independence, born at Allahabad.

**Date of birth: 14 - 11 - 1889**

திகதி எண் : 5

விதி எண் : 6

கா்ம எண் : 2

6. Jane Austen, English novelist, born at Steventon, a remore hamlet in Hampshire, the 7th of 8 Children of the rector.

**Date of birth: 16 - 12 - 1775**

திகதி எண் : 7

விதி எண் : 3

கா்ம எண் : 2



7. Srimavo Bandaranaike, Sri Lankan stateswoman and Prime Minister, born at Ratnapura.

**Date of birth: 17 - 4 - 1916**

**8 - 2 - 2**

திகதி எண் : 8

விதி எண் : 2

கா்ம எண் : 2

8. Queen Elizabeth II was born at 17 Bruston Street in London - Elizabeth Alexadra mary - the elder daughter of king George VI.

**Date of birth: 21 - 4 - 1926**

திகதி எண் : 3

விதி எண் : 7

கா்ம எண் : 2

9. Henry Cooper, Britishh long - reigning heavyweight boxing champion, born at Camberwell in London.

**Date of birth: 3 - 5 - 1934**

திகதி எண் : 3

விதி எண் : 7

கா்ம எண் : 2

10. Garfield sobers, west Indian test cricketer, born at Bridgetown, capital of Barbados.

**Date of birth: 28 - 7 - 1936**

திகதி எண் : 1

விதி எண் : 9

கா்ம எண் : 2

11. Jim Reeves, American singer and entertainer, born in Panola County in Texas.

**Date of birth: 20 - 8 - 1924**

திகதி எண் : 2

விதி எண் : 8

கர்ம எண் : 2

12. James Earl ( Jimmy) Carter, American Democrat statesman and 39th President, born at plains in Georgia.

**Date of birth: 1 - 10 - 1924**

திகதி எண் : 1

விதி எண் : 9

கர்ம எண் : 2

13. Richard Harris, British actor, born in Co. Limerick in the Republic of Ireland.

**Date of birth: 1 - 10 - 1933**

திகதி எண் : 1

விதி எண் : 9

கர்ம எண் : 2

# கர்ம எண் - 3 (வியாழன்)

## KARMIC NUMBER - 3 (JUPITER)

| பிறந்த தேதி எண் | கூட்டு / விதி எண் | கர்ம எண் |
|---|---|---|
| 1, 10, 19, 28 | 5 | 3 |
| 2, 11, 20, 29 | 4 | 3 |
| 3, 12, 21, 30 | 3 | 3 |
| 4, 13, 22, 31 | 2 | 3 |
| 5, 14, 23 | 1 | 3 |
| 6, 15, 24 | 9 | 3 |
| 7, 16, 25 | 8 | 3 |
| 8, 17, 26 | 7 | 3 |
| 9, 18, 27 | 6 | 3 |

பிறருக்கு எவ்வகையிலாவது உதவ வேண்டும் என்ற எண்ணம், சுய நலம் இல்லா இயல்பு, எப்போதும் செயல்படும் ஆர்வம், இம்மூன்றும் 3 ஆம் கர்ம எண்ணில் பிறந்தோரின் சிறப்புக் குணங்கள் ஆகும்.

இந்த எண் உடையோர் தம்மிலும் மேலோர்க்கு விசுவாசமாய் உழைத்து நற்பெயரை சம்பாதிப்பார்கள்.

ஆன்மிக ஈடுபாடு 3ஆம் எண் காரர்களின் இரத்தத் தோடுக் கலந்தது ஆகும்.

நவீன வகை ஆடம்பர சமாசாரங்களை நாடாது தொன்ற தொட்டு வரும் மரபின் வழியையே இவர்கள் நாடுவார்கள்.

இந்த எண்காரர்கள் தமது கடின உழைப்பினால் வாழ்க்கையில் பெரிய இடங்களைப் பிடிப்பார்கள்.

''போது மென்ற மனமே பொன் செய்யும் மருந்து'' என்ற மனப்போக்குடைய இவர்கள் தன் மானத்தைப் பெரிதும் மதிப்பார்கள்.

இவர்கள் எந்த விஷயமானாலும் சுயமாக சிந்தித்துச் செயலாற்றும் திறன் மிக்கவர்கள்.

அறிவு வெளிச்சம் இவர்களுக்கு இயற்கையாகவே அமைந்திருக்கும்.

வியாழன் எனப்படும் குரு உறு துணையாக இருந்தால் மட்டுமே 3-ஆம் கர்ம எண்காரர்களுக்கு மேன்மைகள் கிட்டும்.

வியாழனுடைய பலம் இவர்களுக்கு குன்றும்போது இவர்கள் எதிலும் ஊக்கமின்றி, தர்ம நெறி தவறி இழி நிலைகளைக் காண நேரிடும்.



மிகச் சிறந்த சுபக் கிரகம் எனக் கருதப்படும் வியாழன் அல்லது குரு எந்தவொரு சாதகரது கிரக அமைப்பிலும் உச்சம், ஆட்சி பெற்று பிறந்த இலக்கினத்தை பொறுத்து அது யோக காரகனாக அமைந்தால் அக்கிரகத்தின் திசா புத்திகள் நடை பெறும் காலம் திறமான பலன்களை செய்யும் என திடமாக நம்பலாம். இருப்பினும் சில இலக்கினங்களில் பிறப்பவர்களுக்கு வியாழ கிரகம் நன்மை அதிகம் செய்யாவிடினும் தீமையான பலன்கள் குறைவாகவே செய்யும் என்பது சோதிட சாஸ்திரம் தெரிந்த எவரும் ஒப்பு கொள்ள கூடியது. வியாழன் நீசம், பகை பெற்று சனியின் செயற்கையும் சேர்ந்தாலோ அல்லது வியாழன் சனியின் பார்வை பெற்றாலோ அவரின் பலம் குன்றிவிடும்.

இதைவிட 3 கர்ம எண்ணாக வரும் நாட்களின் அனுபவத்தை வைத்து பெயரை சாதகமாக வைத்துக் கொண்டால் முன்னேற்றம் காணலாம்.

**சிறப்பம்சங்கள்:**

கர்ம எண் 3இல் பிறந்தவர்கள் அறிவு பலம் அமையப் பெற்றவர்கள் இவர்கள் உயர் நிலை பெறு வார்கள். பக்குவமான முறையில் தமது உணர்வுகளை வெளிப்படுத்தும் பாங்கை இவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். இவர்கள் அடுத்தவர்க்கு நல்லது செய்ய

வேண்டுமென எண்ணிச் செயல்படுவார்கள். அறிவினால் பிறரைக் கவருவார்கள்.

கர்ம எண் 3-இல் வரும் நபர்களின் சிறப்பம்சங்களே நான் மேற் சொன்னவை.

## பெயர் எண்-3

12-ஆம் எண்காரர்கள் தமது - நாவன்மையால் மேல் நிலையை அடையப் பெறுவார்கள். இவர்களுக்கு அடுத் தவர்கள் அன்போடு எப்போதும் உதவ முற்படுவார்கள்.

எண் 21: இவர்கள் கடின உழைப்பால் உயர் நிலை அடைவார்கள். எதையும் அனுசரித்துப் போகும் கலை கை வந்தது. இவர்கள் சுயநலச் சின்னங்களாகவே வாழ்வார்கள்.

எண் 30: இவர்கள் சுதந்திரச் செயல்பாட்டையே விரும்புவார்கள்.

இலாப நஷ்டங்களைக் கருதாது தாம் விரும்பியதைச் சாதிக்க முற்படுவார்கள்.

இவர்களின் பலம் - தெளிவான சிந்தனைத் திறன்.

எண் 39: இவர்கள் வாழ்க்கையில் கடின உழைப்பால் உயர்வார்கள். ஆனால் இவர்களுக்கு கீழ்



நிலையில் உள்ளவர்கள் இவர்களைப் பயன் படுத்தி உயர்நிலையடையும் வாய்ப்புகள் அதிகம்.

எண் 48: இவர்கள் எவ்வளவு உழைத்து மேல் நிலையை அடையப் போராடினாலும் விதி யின் கரங்கள் இவர்கள் முன்னேற்றத்தைத் தடுக்கும்.

நல்லன செய்தாலும் அதை நாலு பேர் பழித்து மட்டந்தட்டப் பார்ப்பார்கள்.

ஆயினும் ஆன்மிக பலம் இவர்களுக்கு உண்டு.

எண் 57: இவர்களுக்கு எதுவும் நிரந்தர சிறப்பைத் தராது. உயர்வும் தாழ்வும் சக்கரம் போல் இவர்கள் வாழ்வைச் சுற்றிச் சுற்றி வரும்

எண் 66: இவர்கள் நினைத்ததைச் சாதிக்கும் திறன், நாவன்மை, சமூகச் செல்வாக்கு இவைக ளெல்லாம் சித்திக்கும்.

எண் 75: இவர்கள் அடுத்தவர்களைக் கவர்ந்து அனைவராலும் நேசிக்கப்படும் வாய்ப்புக் களைப்பெறுவர். கலாதேவியின் கடாட்சமும் இவர்களுக்கு நன்றாக வந்தமையும்.

எண் 84: இவர்கள் ஆன்மிகப் போக்கினைத் தொடர் வதாலேயே தமக்கு வந்தமையும் எதிர்ப்புகள், அளவற்ற சோதனைகள், துயர் களில் இருந்து நிவாரணம் பெறலாம்.

எண் 93: இவர்கள் நினைத்ததைச் சாதிப்பார்கள். தொட்டது. துலங்கும். அறிவொளி இயல்பாக அமைந்தமையால் வாழ்க்கையில் உயர் நிலையை விரைவில் அடைவார்கள்.

எண் 102: இவர்களுக்கு எந்தச் செயலுமே இழுபறி நிலையிலேதான் இருக்கும். அமையும் நல்லவை யும் மின்னல் வேகத்தில் மறைந்து போகும்.

## எண்கணித சோதிடத்தில் - கா்ம எண் 3

## KARMIC NUMBER - 3

**Examples**

1. Richard Nixon, American Republican Statesman and 37th President, born at yorba Linda in california.

   **Date of birth: 9 - 1 - 1913**

   திகதி எண் : 9
   விதி எண் : 6
   கா்ம எண் : 3



2. Muhammad Ali, American heavyweight boxing champion, born at Louisville in Kentucky as Cassius Clay.

   **Date of birth: 17 - 1 - 1942**

   திகதி எண் : 8
   விதி எண் : 7
   கா்ம எண் : 3

3. Danny Kaye, American comedy film actor, born at Brooklyn in New York as David Daniel Kaminsky.

   **Date of birth: 18 - 1 - 1913**

   திகதி எண் : 9
   விதி எண் : 6
   கா்ம எண் : 3

4. Albert Einstein, Naturalised - American physicist who propounded the theory of relativity and Nobel prize winner in 1921, died at Princeton in New Jersey.

   **Date of death: 18 - 4 - 1955**

   திகதி எண் : 9
   விதி எண் : 6
   கா்ம எண் : 3

5. Gleen Ford, American film actor, born at Quebec in Canada.

   **Date of birth: 1 - 5 - 1916**

   திகதி எண் : 1
   விதி எண் : 5
   கா்ம எண் : 3

6. Edward Health, British statesman and Conservative Prime Minister, born at Broadstairs in Kent.

**Date of birth: 9 - 7 - 1916**

திகதி எண் : 9

விதி எண் : 6

கர்ம எண் : 3

7. Servere earthquakes occurred at Skopje in Yugoslavia with 1100 deaths.

**Date of event: 26 - 7 - 1963**

திகதி எண் : 8

விதி எண் : 7

கர்ம எண் : 3

8. Peter Sellers, English comedian and film actor, born at southsea in Hampshire

**Date of birth: 8 - 9 - 1925**

திகதி எண் : 8

விதி எண் : 7

கர்ம எண் : 3

9. John F. Kennedy married Jacqueline Lee Bouvier

**Date of marriage: 12 - 9 - 1953**

திகதி எண் : 3

விதி எண் : 3

கர்ம எண் : 3



11. Peter Falk, American TV actor who portrays detective 'Columbo', born in New York City.

**Date of Birth 16 - 9 - 1927**

திகதி எண் : 7

விதி எண் : 8

கர்ம எண் : 3

12. Ernesto 'Che' Guevara, Argentinian - born guerilla leader and revolutionary, was murdered in Bolivia.

**Date of Death 9 - 10 - 1967**

திகதி எண் : 9

விதி எண் : 6

கர்ம எண் : 3

13. Charles Bronson, American film actor, born at Ehrenfield in Pennsylavia as Charles Buchinsky.

**Date of Birth 13 - 11 - 1922**

திகதி எண் : 4

விதி எண் : 2

கர்ம எண் : 3

# கர்ம எண் - 4 (இராகு)

## KARMIC NUMBER - 4 (RAHU/URANUS)

| பிறந்த தேதி எண் | கூட்டு / விதி எண் | கர்ம எண் |
|---|---|---|
| 1, 10, 19, 28 | 1 | 4 |
| 2, 11, 20, 29 | 9 | 4 |
| 3, 12, 21, 30 | 8 | 4 |
| 4, 13, 22, 31 | 7 | 4 |
| 5, 14, 23 | 6 | 4 |
| 6, 15, 24 | 5 | 4 |
| 7, 16, 25 | 4 | 4 |
| 8, 17, 26 | 3 | 4 |
| 9, 18, 27 | 2 | 4 |

4 -ஆம் கர்ம எண்காரர்கள் சொல்லாற்றலால் அனைவரையும் கவர்ந்து விடுவார்கள்.

எப்போதுமே கலகலப்பாக இருக்கும் இவர்கள் யாருக்கும் கட்டுப்பட்டு அடிமைப்பட்டு வாழ மாட்டார்கள்.



இவர்கள் மற்றவர்களுக்கு வழி காட்டும் ஸ்தானத்தை வகிப்பார்கள்.

**சிறப்புக் குணங்கள்:**

இந்தக் கர்ம எண்ணில் பிறந்தவர்கள் தமது அழகான பேச்சுத்திறனால் தமது கருத்துகளை ஆணித்தரமாக வெளியிட்டு பிறர் மரியாதையை எளிதாகப் பெறுவார்கள். சமூக முன்னேற்ற விஷயங்களில் இவர்கள் செயல் திறன் மேலோங்கி இருக்கும்.

எனினும் தமது பேச்சாற்றலைக் கொண்டு தாம் சொல்லும் கருத்துகளில் தவறிருந்தாலும் அதைச் சரியென்று காட்ட முற்படும் இயல்பும் இவர்களுக்கு உண்டு.

இந்தப் போக்கினால் நல்ல நண்பர்களும் பல சமயங்களில் இவர்களை விட்டு ஒதுங்கப் பார்ப்பார்கள்.

நன்னூல்களை நன்கு கற்று நல்ல ஞானத்தை இவர்கள் எளிதில் பெற்று விடுவார்க்ள.

மென்மையான மனம் படைத்த இவர்கள் பாடு பட்டுச் சம்பாதிப்பார்கள். சம்பாதித்ததை கட்டுப்பாடின்றிச் செலவு செய்து விட்டு தவிப்பார்கள்.

எதையும் திட்டமிட்டுச் செய்யும் பக்குவத்தை இவர்கள் பெற வேண்டும்.

அப்படிப் பெற்று விட்டால், இவர்கள் பாதையில் வெற்றிப் பூக்கள் பூத்துக் குலுங்கும் என்பதில் ஐயமே இல்லை.

இராகு ஒரு தீய கிரகமாக தான் சோதிட சாஸ்திரத்தில் கருதப்படுகிறது. சில சோதிடக் கலை நிபுணர்கள் ராகு இடபம், என்னும் இராசியில் உச்சமாகவும் விருச்சிக ராசியில் நீசமாகவும் கருதுகிறார்கள். ஒருவரது ஜாதக கிரக நிலைப்படி ஆட்சிப் பெற்றிருந்தால் நல்ல பலன்களை செய்யுமென்பது சோதிட வல்லுநர்களின் கருத்து.

இருப்பினும் அன்றாட வாழ்வில் 4 கர்ம எண் வரும் நாட்களில் நடக்கும் பலன்களை மையமாக வைத்து பெயரெண்ணை சாதகமான 1 பெயரெண்ணிற்கு மாற்றியமைத்தால் வாழ்க்கையில் வெற்றியையும், மகிழ்ச்சியையும் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை.

## பெயர் எண் 4

எண் 13: இவர்கள் துரதிஷ்ட சாலிகள் எனக் கருதப்படுகிறார்கள்.

வாழ்க்கையில் செல்வம் குவிந்தாலும் ஏதோ ஒரு சஞ்சலம் மனத்தை வாட்டிக் கொண்டே இருக்கும்.



எது கைக்கு வந்தாலும் அது மனத்திற்கு நிறைவைத்தராது. சோதனையும் வேதனையும் ஏதோ ஒரு வகையில் இவர்களைப் பற்றிக் கொள்ளும்.

எண் 22: இவர்கள் பிறந்த கர்ம எண் நன்றாக அமையாத பட்சத்தில் இவர்கள் வாழ்க்கை தீய பாதையிலேயே செல்லும். குறுக்கு வழியில் சம்பாதிக்கவும் தயங்க மாட்டார்கள். கெட்டவர்களின் யோசனையைக் கேளாமல் நேர்மையான பாதையில் சென்றால் சிறப்புப் பெற வாய்ப்பு உண்டு.

எண் 31: இவர்கள் எதையும் சுதந்திரமாகச் செய்ய முற்படுவார்கள். தாம் எதையும் ஈடுபாடின்றி செய்ய முற்படமாட்டார்கள். ஆனால் வாழ்வில் எதையும் நிலையெனக் கருதாது வாழும் ஞானப்போக்கும் இவர்களிடம் உண்டு.

''கைக்கு எட்டினது வாய்க்கு எட்டாமல் போகும்'' வாய்ப்புகள் இவர்களுக்கு அதிகம்.

அதற்காக இவர்கள் தளர்ந்து போக மாட்டார்கள்.

இந்த நேரத்தில் இது நடக்கும் என்று கணிக்க முடியாத வண்ணம் இவர்களுக்கு வாழ்க்கை அமையும்.

எண் 40: இவர்கள் வாழ்க்கை வசந்தமாகவே இருக்கும். நாலு பேருக்கு வழிகாட்டும் ஸ்தானத்தை இவர்கள் வகிப்பார்கள்.

அஞ்சாது பணியாற்றி புகழும் செல்வமும் இவர்கள் பெற்றாலும் பலரின் பார்வையிலும் கெட்டவராகவே காட்சியளிப்பார்கள்.

எண் 49: இல் பெயர் அமையப்பெற்றவர்கள் புதிய புதிய கோணங்களில் சிந்தித்துப் பார்த்து அதைச் செயற்படுத்தும் திறன் இவர்களுக்கு உண்டு. பணம் இவர்களை நாடிக் குவியும். ஆனால் திடீர் வெற்றி, திடீர் தோல்வியாகவும் மாறிவிடலாம்.

எண் 58: இவர்கள் வாழ்க்கையில் வெற்றிகளை விரைவாகச் சந்திப்பார்கள்.

ஒழுக்கத்தில் உயர்ந்தோராய் ஆன்மிகப் பற்று உடையோராய் இவர்கள் இருப்பார்க்ள.

வாழ்க்கையில் ஏற்றங்களைப் போலவே சில சமயம் இறக்கங்களும் இவ் வெண்காரர்களுக்கு உண்டு.

எண் 67: இவர்கள் நேச உணர்ச்சியை நெஞ்சில் ஏந்திய தூயவர்கள். அயராது உழைத்து முன்னேறுவார்கள். கலையாற்றல் இவர்களை சூழ்ந்திருக்கும்.



அவ்வப்போது ஏற்படும் சலனப் போக்குகளைத் தமது மன உறுதியால் தகர்த்து விட்டால் இவர்கள் வாழ்வில் மேனிலை விரைவில் அடையலாம்.

எண் 76: இவர்கள் வாழ்வின் முற்பகுதியில் செல்வத்தின் மடியிலும், பிற்பகுதியில் துயரத்தின் பிடியிலும் இருக்க நேரிடும்.

அடுத்தவர்க்கு அள்ளிக் கொடுக்கும் வள்ளல் குணம் மிக்கவர்கள் இவர்கள்.

ஆனால் நேற்று சம்பாதித்ததை இன்று இழந்து விடும் விந்தையும் இவர்கள் வாழ்வில் ஏற்படலாம்.

எண் 85: இவர்கள் அடுத்தவரை நேசிக்கும் இயல்பு ஆன்மிகத்துறையில் நாட்டம் கொண்டவர் களாக இருப்பார்கள். இவர்களைச் சமூகம் உயர்ந்த முறையில் வைத்து மரியாதை செய்யும்.

எண் 94: இவர்கள் தமது முன்னோடிச் செயல்களால் மக்கள் பாராட்டைப் பெறுவார்கள்.

இவ்வெண்காரர்கள்மேல் அன்பைப் பிறர் எப்போதும் சொரிந்த வண்ணம் இருப்பர்.

ஆனால் வாழ்வில் ஏற்ற இறக்கங்களும் அடிக் கடி நிகழும். பொதுவில் இவ்வெண் காரர்கள் பாக்கியசாலிகள் என்றே கருத வேண்டும்.

எண் 103: இவர்கள் வாழ்க்கை எப்போதும் முன்னேற்ற நிலையில் இருந்து கொண்டே இருக்கும். வருமானம் மிகுந்திருக்கும். எந்த எதிர்ப்பை யும் சமாளித்து முன்னேறுவார்கள்.

## எண்கணித சோதிடத்தில் - கர்ம எண் 4

## KARMIC NUMBER - 4

**Examples**

1. Mohandas 'Mahatma' Gandhhi, Indian political and religious leader, born at porbander.

   **Date of birth: 2 - 10 - 1869**
   திகதி எண் : 2
   விதி எண் : 9
   கர்ம எண் : 4

2. Aristotle Onassis, Greek ship-owner, born at Smyrna in Turkey.

   **Date of birth: 15 - 1 - 1906**
   திகதி எண் : 6
   விதி எண் : 5
   கர்ம எண் : 4



3. 'Mahatma' Gandhi, Indian political and religious leader was assassinated in his own garden in New Delhi by a Hindu fanatic Nathuram vinayak godse - 10 days after a previous attempt on his life.

   **Date of death: 30 - 1 - 1948**
   திகதி எண் : 3
   விதி எண் : 8
   கர்ம எண் : 4

4. Mrs Sirimavo Bandaranaike took up office as Prime Minister of Ceylon, and became the world's first woman to hold such a position.

   **Date of event: 21 - 7 - 1960**
   திகதி எண் : 3
   விதி எண் : 8
   கர்ம எண் : 4

5. Neli Armstrong command pilot of Appollo 11, left tthhe lunar module 'Eagle' and set foot on the moon, on the Sea of Tranquillity.

   **Date of event: 21 - 7 - 1969**
   திகதி எண் : 3
   விதி எண் : 8
   கர்ம எண் : 4

6. Bust Lancaster, American film actor and Oscar winner, born in New York City.

   **Date of birth; 2 - 11 - 1913**
   திகதி எண் : 2
   விதி எண் : 9
   கர்ம எண் : 4

7. John F. Kennedy, American Democrat statesman and 35th President from 1961, was assassinated at Dallas allegedly by Lee Harvey Oswald the remainder of his term of office was completed by Lyndon Johnson.

**Date of death: 22 - 11 - 1963**

திகதி எண் : 4

விதி எண் : 7

கா்ம எண் : 4

8. The 'Unsinkable' white star passenger liner 'Titanic' sank in 2 1/2 hours on her maiden voyage form Southampton to New York City, hitting an iceberg off Newfoundland, with the loss of over 1500 lives.

**Date of event: 15 - 4 - 1912**

திகதி எண் : 6

விதி எண் : 5

கா்ம எண் : 4

9. Adolf Hitler committed suicide with his wife Eva Braun, in his underground bunker beneath the Chancellory in Berlin.

**Date of death: 30 - 4 - 1945**

திகதி எண் : 3

விதி எண் : 8

கா்ம எண் : 4

10. Dean Martin, American actor, singer and entertainer, born as Dino Paul Crocetti, at Steubenville in Ohio.

**Date of birth: 7 - 6 - 1917**

திகதி எண் : 7

விதி எண் : 4

கா்ம எண் : 4



11. Prince Andrew (Andrew Albert Christian Edward), third child and second son of Queen Elizabeth II, born at Buckingham palace.

**Date of birth: 19 - 2 - 1960**

திகதி எண் : 1

விதி எண் : 1

கா்ம எண் : 4

12. Michael Caine, English film actor, born in London as Maurice Micklewhite.

**Date of birth: 14. 3. 1933**

திகதி எண் : 5

விதி எண் : 6

கா்ம எண் : 4

13. Elton John, British Musician and pop singer, born at Pinner in Middlesex as Reginald Kenneth Dwight.

**Date of birth: 25 - 3 - 1947**

திகதி எண் : 7

விதி எண் : 4

கா்ம எண் : 4

14. James Garner, American Film actor, born at Norman in Okalhoma as James Baumgarner.

**Date of birth: 7 - 4 - 1928**

திகதி எண் : 7

விதி எண் : 4

கா்ம எண் : 4

15. Solomon Bandaranaike, Prime Minister of Sri Lanka from 1956, was shot by a Buddhist monk in Colombo, and died the following day.

**Date of event: 25 - 9 - 1959**

திகதி எண் : 7

விதி எண் : 4

கர்ம எண் : 4

16. Jane Fonda, American film actress, born in New York City, the daughter of Henry Fonda.

**Date of birth: 21 - 12 - 1937**

திகதி எண் : 3

விதி எண் : 8

கர்ம எண் : 4

17. Ava Gardner, American film actress, born at Smithfield in North Carolina as Lucy Johnson.

**Date of birth: 24 - 12 - 1922**

திகதி எண் : 6

விதி எண் : 5

கர்ம எண் : 4

# கர்ம எண்-5 (புதன்)

## KARMIC NUMBER - 5 (MERCURY)

| பிறந்த தேதி எண் | கூட்டு / விதி எண் | கர்ம எண் |
|---|---|---|
| 1, 10, 19, 28 | 6 | 5 |
| 2, 11, 20, 29 | 5 | 5 |
| 3, 12, 21, 30 | 4 | 5 |
| 4, 13, 22, 31 | 3 | 5 |
| 5, 14, 23 | 2 | 5 |
| 6, 15, 24 | 1 | 5 |
| 7, 16, 25 | 9 | 5 |
| 8, 17, 26 | 8 | 5 |
| 9, 18, 27 | 7 | 5 |

கர்ம எண் 5இல் பிறந்தவர்கள் 5ஆம் எண்ணுக் குரியோராவர்.

'நன்றே செய், அதை இன்றே செய்' என்ற கோட்பாடுடைய இவர்கள் மின்னல் வேகத்தில் தம் பணியைச் செய்யத் துடிப்பார்கள்.

ஆனால் வாழ்வில் குறுக்கு வழியில் சம்பாதிப்பதற்கு இவர்கள் தம் நேரத்தைச் செலவழித்தால் நிச்சயம் படுதோல்வி அடைவார்கள்.

''நான் விழுவது எழுவதற்கே'' என்று ஆங்கிலக் கவிஞன் மில்டன் சொல்லுவான்.

அது இந்த எண்காரர்களுக்கு மிகவும் பொருந்தும்.

எந்த விஷயத்தில் துவண்டு விழுந்தாலும் உடனே எழுந்து பழைய படி தமது பணியைத் தொடர்வார்கள்.

இது தவிர, ''தாம் பிடித்த முயலுக்கு மூன்று கால்'' என்று பிடிவாதம் காட்டாது பிறருக்கு நாணல் போல் வளைந்து கொடுத்துத் தமது காரியங்களைச் சாதித்துக் கொள்ளும் சாமர்த்தியமும் இவருக்குண்டு.

பழிக்கு பழி தீர்க்கும் சுபாவம் இவர்களுக்குக் கிடையாது. இளகிய தமது மனப்போக்கால் தமக்குத் தீங்கிழைப்போரையும் மன்னித்து விடுவார்கள்.

எப்படிச் சம்பாதிப்பது என்ற விஷயத்தை இவர்களிடம் மற்றவர்கள் கற்றுக் கொள்ளும் அளவுக்கு குறுகிய காலத்தில் பெறும் செல்வத்தை இவர்கள் சம்பாதித்து விடுவார்கள்.

5ஆம் எண் கொண்டோர் தமது புத்தி பலத்தால் மற்றவர்களை வழி நடத்தும் 'ஆளுமை' மிக்கவர்கள்.



தமக்கு சரி என்று பட்டதை இந்த எண்காரர்கள் துணிந்து செய்தால் இவர்களை இகழ்பவர்களே நாளை இவர்களைப் புகழ்வார்கள்.

பொதுவாக இவர்களுக்கு நான் கூறும் அறிவுரை என்னவென்றால் இவர்கள் தன்னம்பிக்கையுடன் காரிய மாற்றத் தயங்கக் கூடாது.

5ஆம் எண்காரர்களுக்கு புதனின் செயற் சக்தி குறைந்திருக்கும் பட்சத்தில் இவர்கள் தீயபாதையில் திரும்பி தர்ம விரோதச் செயல்களைப் புரியத் தயங்க மாட்டார்கள்.

இந்த எண்காரர்கள் சுதந்திரப் பறவைகளாக வாழத் துடிப்பவர்கள். இவர்களை எந்தப் பணியில் அமர்த்தி னாலும் அதில் நிரந்தரமாக ஒட்டிக் கொண்டிராது, புதிய புதிய தொழில்களில் நாட்டங் கொண்டு திரிவார்கள்.

திருமண வாழ்க்கையைப் பொறுத்தவரை 5,9 எண்ணுடையோர் இவர்களுக்குப் பொருந்தி வருவார்கள்.

5ஆம் எண் காரர்களைத் தேடித் தேடி நண்பர்கள் வருவார்கள். நண்பர்களே இந்த எண்காரர்களுக்கு நல்ல துணை.

இந்த எண்காரர்கள் எந்த விஷயத்தைப் பற்றியும் அளவுக்கு அதிகமாக எண்ணிக் குழம்பிக் கொண

டிருக்காது மனத்தை அமைதியாக வைத்துச் செயலாற்றப் பழகிக் கொள்ள வேண்டும்.

புதன் கிரகத்தை பற்றி சோதிடத்தில் சேர்ந்து இயங்கும் தன்மையுடையதாக கருதப்படுகிறது. இது ஆட்சி உச்சம் பெறும் கன்னி வீட்டில் அமர்ந்து அதனுடன் சுபக்கிரமான வியாழன் அல்லது வெள்ளி கூடி மறைவுஸ்தானமற்ற இராசிகளில் நிலை கொண்டிருப்பின் உகந்த பலன்களை செய்யும் மென்பது சோதிட ஆராய்ச்சியாளர்களின் முடிவு. ஒருவரின் சாதக குறிப்பில் புதனின் நிலையை கொண்டு எந்த எண்ணில் வரக் கூடியதாக பெயர் வைக்கலாம் எனத் தீர்மானிக்க வேண்டும்.

கர்ம எண் 5 ஆக வரும் நாட்களில் நடக்கும் சம்பவங்களை அனுபவ ரீதியாக அறிந்து 6 அல்லது 9 எண்ணில் பெயரை மாற்றிக் கொண்டால் மிக உன்னதமான, உயர்வான பலன்களை அடையலாம் என்பது எனது ஆராய்வின் முடிவு.

**பெயர் எண் 5இன் சிறப்பம்சங்கள்:**

எண்-5: செல்வம் குவியும். உன்னதமான வாழ்க்கை அமையும். அனைவரையும் வசீகரிக்கும் ஆற்றல் இயல்பாக அமையும். அயராது உழைக்க இவர்கள் பின் வாங்கக் கூடாது.



எண்-14: அடுத்தவர்கள் மதிக்கும் உயர்பீடம் இவர்களுக்குக் கிடைக்கும். வணிகத் துறையில் ஈடுபட்டால் கொடிகட்டிப் பறப்பார்கள். எதிலும் நிதானப் போக்கை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

எண்-23: அடுத்தவர்கள் பார்த்துப் பிரமிக்கும் படியாக கடின காரியங்களையும் இவர்கள் இலகுவாக செய்து முடிக்கலாம்

ஊக்கத்தோடு இவர்கள் எப்போதும் செயல்பட வேண்டும்.

அப்படிச் செய்தால் எந்தச் செயலிலும் வெற்றி மேல் வெற்றி தான்.

எண் 32: காந்தம் போல் பிறரைக் கவரும் பேச்சு, சுயமாக எந்த விஷயத்திலும் முடிவெடுக்கும் திறன் இவை இவர்களின் சொத்து. மனம் விரும்பிய வாழ்வை இவர்கள் பெறுவார்கள்.

எண்-41: இவர்கள் இலட்சியப் பிடிப்போடு வாழ்பவர்கள்.

ஏனோ தானோ என்று எச்செயலையும் பொறுப்பின்றிச் செய்ய மாட்டார்கள்.

''தம்மால் இது முடியும்'' என்ற தெளிவையும் திடத்தையும் ஏற்படுத்திச் செயலாற்றினால் எச் செயலிலும் வெற்றி காணலாம்.

எண்-50: நல்லறிவு இவர்களின் சொத்து. ஆனால் புகழ், செல்வாக்கு எல்லாம் மிக மெதுவாகவே இவர்களைத் தேடி வரும்.

எண்-59: அனைவரும் இவர்களை விரும்புவார்கள். மற்றவர்களை சிரிக்க வைக்கும் ஆற்றல் இவர்களுக்கு நிரம்ப உண்டு.

ஒழுக்க நெறி தவறாது இவர்கள் வாழப் பழகினால் மிக நன்று.

எண்-68: இந்த எண்காரர்கள் தமது சுய ஆற்றலைச் சரியாகச் கணித்து எதிலும் காலெடுத்து வைக்க வேண்டும்.

அலைபாயும் மனத்தை அடக்க வேண்டும்.

எண்-77: ஊக்கமது கைவிடேல்' என்ற முதுமொழி இவர்களை வழி நடத்தினால் வாழ்க்கையில் எதிலும் வெற்றி காணலாம்.

ஆன்மிக ஈடுபாடு இவர்களுக்கு அமைந்திருந் தால் மனத்தைக் கட்டுப்படுத்திச் செயலாற்ற உதவும்.



எண்-86: இந்த எண்காரர்கள் பாக்கிய சாலிகள். இவர் கள் விரும்புவது இவர்களுக்குக் கிடைக்கும்.

ஆனால் கடின உழைப்பினாலேயே அவற்றை இவர்கள் பெற வேண்டும்.

இல்லறமும் நல்லறமாக அமையும்.

எண்-95: இந்த எண் கொண்டோர் எச் செயலையும் அச்சமின்றிச் செய்து துணிச்சல்காரன் என்று பெயரெடுப்பார்கள்.

தமது பேச்சாற்றலால் மக்களை வசப் படுத்துவார்கள்.

சுதந்திரமாக இவர்கள் தொழிலைச் செய்து விரைவில் முன்னேறலாம்.

எண்-104: மற்றவர்கள் மதிக்கும் நிலையில் வாழும் இவர்கள் வாழ்க்கை எப்போதும் ஒரே சீராக இராது. செல்வ நிலை மந்தப் போக்கிலேயே இருக்கும்.

# எண்கணித சோதிடத்தில் - கர்ம எண் 5

# KARMIC NUMBER - 5

**Examples**

1. Martin Luther King, American clergyman and Black civil - rights leader, born at Atlanta in Georgia.

   **Date of birth: 15 - 1 - 1929**

   திகதி எண் : 6
   விதி எண் : 1
   கர்ம எண் : 5

2. Adolf Hitler, German dictator and Nazi leader, born at Braunau in Austria, the son of a Customs official, who has changed his name from Schicklgruber.

   **Date of birth: 20 - 4 - 1889**

   திகதி எண் : 2
   விதி எண் : 5
   கர்ம எண் : 5

3. Paul Newman, American film actor, born at Cleveland in Ohio.

   **Date of birth: 26 - 1 - 1925**

   திகதி எண் : 8
   விதி எண் : 8
   கர்ம எண் : 5



4. Burt Reynolds, American film actor, born at waycross in Georgia.

   **Date of birth: 11 - 2 - 1936**

   திகதி எண் : 2
   விதி எண் : 5
   கர்ம எண் : 5

5. Sidney Poitier, American film actor and first black Oscar winner, born at Miami in Florida

   **Date of birth: 20 - 2 - 1927**

   திகதி எண் : 2
   விதி எண் : 5
   கர்ம எண் : 5

6. Edward Kennedy, American senator and younger brother of President Kennedy, born at Brookline in Massachhusetts.

   **Date of birth: 22 - 2 - 1932**

   திகதி எண் : 4
   விதி எண் : 3
   கர்ம எண் : 5

7. Apollo 9 was launched, with Jame McDivitt, David Scott and Russell Schweickart.

   **Date of event: 3 - 3 - 1969**

   திகதி எண் : 3
   விதி எண் : 4
   கர்ம எண் : 5

8. James Callaghan, Britih statesman and Labour Prime Minister from 1976 to 1979, born at Portsmouth.

**Date of birth: 27 - 3 - 1912**

திகதி எண் : 9
விதி எண் : 7
கர்ம எண் : 5

9. Adolf Hitler, German dictator and nazi leader, born at Brannau in Austria, the on of a custom official, who had changed his name from Schhicklgruber.

**Date of birth: 20 - 4 - 1889**

திகதி எண் : 2
விதி எண் : 5
கர்ம எண் : 5

10. The ill-fated Britishh liner 'Titanic' was launhed at the Harland and wolff shipyard at Belfast.

**Date of event: 31 - 5 - 1911**

திகதி எண் : 4
விதி எண் : 3
கர்ம எண் : 5

11. Tom Jones, British entertainer, born at Pontypridd in South Wales as Thomas Jones Woodward.

**Date of birth: 7 - 6 - 1940**

திகதி எண் : 7
விதி எண் : 9
கர்ம எண் : 5



12. The great Train Robbery took place at Sears Crossing at Mentmore, near Cheddington in Buckinghamshire, on the Glassgow to London mail train. The haul was over 2 1/2 million pounds in bank notes on their way for destruction.

**Date of event: 8 - 8 - 1963**

திகதி எண் : 8
விதி எண் : 8
கர்ம எண் : 5

13. Alfred Hitchcock, American film producer and master of suspense, born at Leytonstone in London, the son of a greengorcer.

**Date of birth: 13 - 8 - 1899**

திகதி எண் : 4
விதி எண் : 3
கர்ம எண் : 5

14. Charlton Heston, American film actor and Oscar winner, born at Evansville in Illinois.

**Date of birth: 4 - 10 - 1924**

திகதி எண் : 4
விதி எண் : 3
கர்ம எண் : 5

15. Cliff Richard, English singer and entertainer, born at Lucknow in India as Harry Webb.

**Date of birth: 14 - 10 - 1940**

திகதி எண் : 5
விதி எண் : 2
கர்ம எண் : 5

16. Diana Dors, English film acress, born at Swindon in Wiltshire as Diana Fluck.

**Date of birth: 23 - 10 - 1931**

திகதி எண் : 5

விதி-எண் : 2

கர்ம எண் : 5

17. Prince Charles (Charles Philip Arthur George), Prince of wales, born at Buckinghham Palace.

**Date of birth: 14 - 11 - 1948**

திகதி எண் : 5

விதி எண் : 2

கர்ம எண் : 5

18. Josept Stalin, Soviet political leader, born at Gori in Georgia as Josephh vissarionovich Dzhugashvili, the son of a shoemaker.

**Date of birth: 21 - 12 - 1879**

திகதி எண் : 3

விதி எண் : 4

கர்ம எண் : 5

# கர்ம எண்-6: (சுக்கிரன்)

## KARMIC NUMBER - 6 (VENUS)

| பிறந்த தேதி எண் | கூட்டு / விதி எண் | கர்ம எண் |
|---|---|---|
| 1, 10, 19, 28 | 2 | 6 |
| 2, 11, 20, 29 | 1 | 6 |
| 3, 12, 21, 30 | 9 | 6 |
| 4, 13, 22, 31 | 8 | 6 |
| 5, 14, 23 | 7 | 6 |
| 6, 15, 24 | 6 | 6 |
| 7, 16, 25 | 5 | 6 |
| 8, 17, 26 | 4 | 6 |
| 9, 18, 27 | 3 | 6 |

இலக்கியம், இசை போன்ற பல கலைகளில் நாட்டமும், ஆற்றலும் மிக்க இவர்கள் பிறரை தம் வசப்படுத்துவதில் வல்லவர்கள்.

கர்ம எண் 6இல் பிறந்த இவர்கள் சுக்கிரனின் சக்தியில் சுழல்பவர்கள்.

எந்த விஷயத்திலும் தீர்க்கமான முடிவுகளை எடுப்பதுடன் எதையும் தீவிரமாக செயலாற்றி முடித்து வெற்றி பெறுவார்கள் இவர்கள்.

இவர்கள் மற்றவர்களை நேசிப்பார்கள்.

அடுத்தவர்களுக்காக எவ்விஷயத்தையும் தியாகம் செய்யவும் தயங்க மாட்டார்கள்.

பொதுவில் சுயநலமே இல்லாத உயர்ந்த குணம் மிக்கவர்கள் இவர்கள்.

இவர்களது நல்ல முயற்சியால் செல்வம் சேர்ப்பார்கள்.

குடும்ப வாழ்வும் நன்கு அமையும்.

இவர்களை பிறர் வெற்றி கொண்டு வீழ்த்துவது மிகவும் கடினம், இவர்களது அஞ்சாமைப் பண்பும் அயராத உழைப்பும் இவர்களை எதிர்ப்பவர்களைப் புறந்தள்ளி விடும்.

மனத்தைப் போலவே உடலும் இவர்களுக்கு வலிமையோடு தான் இருக்கும்.

எந்த வழியிலாவது நுண்கலைத் தொடர்புடைய தொழிலே இவர்களை உயர்த்தும். அதுதான் இவர்களுக்கு ஒத்தும் வரும்.



மணவாழ்க்கையில் 3, 6 எண்காரர்கள் இவர்களுக்கு நன்கு பொருந்தி வருவார்கள்.

இந்த எண்காரர்கள் வாழ்க்கை பொதுவில் இன்பம் நிறைந்தே இருக்கும்.

ஆனால் இவர்களுக்கு சுக்கிரபலம் குறையும் பட்சத்தில் இவர்கள் நிலை தடுமாறி குறுக்கு வழியில் சென்று பல விஷயங்களிலும் தோல்வியைத் தழுவிக் கொள்வார்கள்.

கர்ம எண் 6ஐ குறிக்கும் சுக்கிரன் அல்லது வெள்ளி என்ற கிரகம் உச்சம், ஆட்சி நட்பு போன்ற நிலைகளில் ஜாதக கிரக நிலையில் அந்தந்த இலக்கினங்களுக்கு யோக காரகனாக அமைந்து விட்டால் நன்மையான பலன்களை சுக்கிர திசை, புத்தி காலங்களில் செய்வார். முக்கியமாக பொருள், வருவாய், வீடு, வாகன வசதி முதலியவற்றை கொடுக்க வல்லவர், இருப்பினும் வெள்ளி மறைவு ஸ்தானத்திலோ, நீசம் பெற்றோ கிரக அமைப்பில்வரினும் அதிகமான கெட்ட பலன்களை செய்வாரென்பதில்லை.

ஆனால் பொதுவாக கர்ம எண் 6 வரும் நாட்களில் நன்மையான காரியங்கள் தடங்கலின்றி நடை பெறும். கர்ம எண் 6இல் பிறந்தவர்கள் பெயரை 3, 6, 9, என எந்த எண்ணிலும் வைக்கலாம்.

## பெயர் எண் 6

எண்-6: இவர்கள் நேர்மையானவர்கள். சிறந்த கலை யாற்றல் மிக்கவர்கள். சமூகத்தில் அடுத்தவர் கள் இவர்களை மிகவும் மதிப்பார்கள்.

'சாது மிரண்டால் காடு கொள்ளாது' என்பது போல் கோபம் இவர்களுக்கு வராது, வந்தால் விரைவில் போகாது.

ஆனால் அன்பு மனம், பொது நலப்போக்கு இவர்களுடன் கூடப் பிறந்தது.

எண்-15: இவர்கள் நாவன்மையால் அனைவரையும் கவர்ந்து விடுவார்கள்.

அடுத்தவர்களின் குணாதிசயங்களை எளிதில் அறிந்து கொள்வார்கள்.

தம்மை மதியாதோரின் செயல்களை மனத்தில் ஆழமாக வைத்து பழிதீர்க்கும் போக்கும் இவர்களுக்குண்டு.

எண்-24: அடக்கம், அன்பு இரண்டும் இவர்களின் எல்லா வெற்றிகளுக்கும் காரண மாக இருக்கும்.

தமது இலட்சியத்தில் மிகவும் உறுதியாக இருப்பார்கள்.



அடுத்தவர்கள் இவர்களுக்கு மிகவும் மதிப்பு கொடுப்பார்கள்.

கர்வம் இவர்களுக்கு சற்று மேலோங்கியே இருக்கும். ஆனால் அடுத்தவர்களுக்கு எள்ளளவும் தீமை செய்யமாட்டார்கள்.

எண்-33: இவர்கள் ஆன்மிகப் பாதையில் மேலோங்கித் திகழ்வார்கள்.

அருட் செல்வத்தைப் போல பொருட் செல்வமும் இவர்களிடம் குவிந்தே இருக்கும்.

எண்-42: இவர்கள் மனத்திடம் மிக்கவர்கள். ஆனால் அளவுக்கு அதிகமான ஆசை எதன் மீதும் இவர்களுக்கு இருக்கும்.

செல்வம் சிலவேளை இவர்களிடம் இல்லா விட்டாலும் கூட உயர்ந்த பதவிகளை இவர்கள் பெறுவார்கள்.

எண்-51: இவர்கள் வாழ்க்கையில் பெரிய பெரிய செயல்களை தமது அயராத உழைப்பால் சாதிப்பார்கள்.

மனோதிடமும் உடல் வலிமையும் இவர்களின் பெரும் செல்வம்.

எண்-60: இவர்கள் தென்றல் காற்றைப்போல் மென்மை யான இயல்புடையவர்கள்.

பேச்சாற்றல் இவர்கள் பெற்ற இனிய வரம்.

இல்லற வாழ்வும் மிக இன்பமாக அமையும்.

எண்-69: இவர்கள் எண்ணியதை எண்ணியபடி பெறும் ஆற்றல் பெற்றவர்கள்.

இவர்கள் தாமே தம் முயற்சியால் மேல் நிலை அடைவார்கள்.

அடுத்தவர்கள் பார்த்து விளங்கும் வண்ணமே இவர்கள் வாழ்க்கை அமைந்திருக்கும்.

எண்-78: இவர்கள் தூய்மையான ஆன்மிக வாதிகளாக திகழ வல்லவர்கள்.

இலக்கிய ஆற்றல், பிறரை ஈர்க்கும் நாவன்மை இவர்களுக்குண்டு.

அலையாமலேயே பெரிய வருமானத்தைப் பெறும் வாய்ப்பு இவர்களுக்குண்டு.

ஆனால் எப்போதும் நேர்மை தவறாது இவர்கள் நடக்க வேண்டும்.



எண்-87: இந்தப் பெயர் எண் நல்ல எண் என்று சொல்ல முடியாது.

இந்த எண் உடையோர் எந்த விஷயத்திலும் மிகவும் கவனமாக இறங்க வேண்டும். ஏனென்றால் இந்த எண்காரர்கள் பலரது வாழ்வும் போற்றத்தக்க முறையில் அமைய வில்லை.

எண்-96: இந்த பெயர் எண்ணுடையோர்க்கு அறிவின் பிரகாசம் மிகுதியாக இருக்கும் நெருங்கிய எந்தப் பொருளும் இவர்களுக்குக் கைகூடும்.

எண்-105: இவர்கள் வாழ்க்கை மண்ணில் நல்ல வண்ணம் அமையும்.

எல்லாச் செல்வங்களும் இவர்களை நாடி வரும்

இது மிக நல்ல எண்களில் ஒன்றாகும்.

# எண்கணித சோதிடத்தில் - கர்ம எண் 6

# KARMIC NUMBER - 6

**Examples**

1. Omar Sharif, film actor, born at Alexandria in Egypt as Michel Shaboub (or Shalhouz)

   **Date of birth: 10 - 4 - 1932**

   திகதி எண் : 1

   விதி எண் : 2

   கர்ம எண் : 6

2. Richard Burton British dramatic actor, born as Richard Jenkins at Pontrhydfen in South Wales.

   **Date of birth: 10 - 11 - 1925**

   திகதி எண் : 1

   விதி எண் : 2

   கர்ம எண் : 6

3. Lance Gibbs, West Indian cricketer, born at Georgetown in Guyana,

   **Date of birth: 29 - 9 - 1934**

   திகதி எண் : 2

   விதி எண் : 1

   கர்ம எண் : 6



4. Oliver Hardy, American comedian of Laurel and Hardy cinema fame, born at Atlanta in Georgia.

   **Date of birth: 18 - 1 - 1892**

   திகதி எண் : 9

   விதி எண் : 3

   கர்ம எண் : 6

5. Julie Andrews, English film acress and singer, born at Walton on Thames in surrey as Julie Wells.

   **Date of birth: 1 - 10 - 1935**

   திகதி எண் : 1

   விதி எண் : 2

   கர்ம எண் : 6

6. Katharine Hepburn, American film across and Oscar winner on 2 occasions, born at Hartford in Connecticut.

   **Date of birth: 9 - 11 - 1909**

   திகதி எண் : 9

   விதி எண் : 3

   கர்ம எண் : 6

7. King Hussein of Jordan was born at Amman, the Son of king Talal.

   **Date of birth: 14 - 11 - 1935**

   திகதி எண் : 5

   விதி எண் : 7

   கர்ம எண் : 6

8. Lana Turner, American film acress, called the original 'sweater girl' born at Wallace in Idaho as Julia Turner.

**Date of birth: 8 - 2 - 1920**

திகதி எண் : 8

விதி எண் : 4

கர்ம எண் : 6

9. Adolf Eichmann, German Nazi Official responsible for the execution of millions of jews during world War II, born at solingen.

**Date of birth: 19 - 3 - 1906**

திகதி எண் : 1

விதி எண் : 2

கர்ம எண் : 6

10. Warren Beatty, American film actor and director, born at Richmond in Virginia, the older brother of Shirley Maclaine.

**Date of birth: 30 - 3 - 1938**

திகதி எண் : 3

விதி எண் : 9

கர்ம எண் : 6

11. Jacqueline Onassis, widow of President Kennedy, born at Southampton in New York as Jacqueline Lee Bouvier.

**Date of birth: 28 - 7 - 1929**

திகதி எண் : 1

விதி எண் : 2

கர்ம எண் : 6



12. An atom bomb was dropped on the Japanese city of Hiroshima, from a Boeing B29 bomber 'Enola Gay'.

**Date of event: 6 - 8 - 1945**

திகதி எண் : 6

விதி எண் : 6

கர்ம எண் : 6

13. Sophia Loren, Italian actress and Oscar winner, born as Sophia Scicoloni.

**Date of birth: 20 - 9 - 1934**

திகதி எண் : 2

விதி எண் : 1

கர்ம எண் : 6

14. Bhagwan Shri Rajneesh mystics & religious leader

**Date of birth: 11 - 12 - 1931**

திகதி எண் : 2

விதி எண் : 1

கர்ம எண் : 6

15. Satya Sai Baba - Indian Mystics & religious leader

**Date of birth: 23 - 11 - 1926**

திகதி எண் : 5

விதி எண் : 7

கர்ம எண் : 6

# கர்ம எண்-7 (கேது)

## KARMIC NUMBER - 7 (KETU/NEPTUNE)

| பிறந்த தேதி எண் | கூட்டு / விதி எண் | கர்ம எண் |
|---|---|---|
| 1,10,19,28 | 7 | 7 |
| 2,11,20,29 | 6 | 7 |
| 3,12,21,30 | 5 | 7 |
| 4,13,22,31 | 4 | 7 |
| 5,14,23 | 3 | 7 |
| 6,15,24 | 2 | 7 |
| 7,16,25 | 1 | 7 |
| 8,17,26 | 9 | 7 |
| 9,18,27 | 8 | 7 |

இந்த எண்ணின் விசேடம் என்னவென்றால் ஆன்மிக நாட்டம் என்பது இவர்களுக்கு இயற்கையாகவே அமைந்திருக்கும்.

சாந்த சுபாவத்துடன் புண்ணிய செயல்களைச் செய்ய இவர்கள் மனம் துடிக்கும்.



**சிறப்பியல்புகள்:**

கர்ம எண் 7இல் பிறப்போர் அனைவரையும் ஆள்பவன் கேது.

இயல்பாகவே ஆன்மிக நாட்டம் உடைய இவர்கள் சாந்த குணவான்கள். சிலர் முன்கோபக் குணத்தோடு இருப்பார்கள்.

யாருக்கும் தீங்கு செய்ய முற்பட மாட்டார்கள்.

தனிமையின் இனிமையையே இவர்கள் அதிகம் விரும்புவார்கள்.

ஆனாலும் நல்ல நண்பர்களைத் தெரிவு செய்து பழகவும் தயங்க மாட்டார்கள்.

ஆனால் எந்தச் சோதனையையும் பிறருக்கு வெளிப் படுத்தாமலும் தாமே தமக்கு ஆறுதல் சொல்லியும் வாழ்வார்கள்.

இலக்கியம் இசை போன்ற பல்கலை ஆர்வம் இவர்களுக்கு இரத்தத்தில் கலந்த ஒன்றாகும்.

7-ஆம் எண்ணில் அடங்குவோர் இல்லற வாழ்வு மகிழ்ச்சியாக எப்போதும் இருக்குமெனச் சொல்ல முடியாது.

ஆனால் இவர்களின் ஆன்மிகப் பலத்தால் வாழ்வில் உயர்நிலை பெறலாம்.

சரியான முறையில் தமது மனத்தைத் திடப்படுத்தி தீவிரமாக உழைத்தால் எந்த விஷயத்திலும் வெற்றி காணலாம்.

7 எண்ணைக் கர்ம எண்ணாக உடையவர் சிலர் மருத்துவத் துறையில் ஈடுபட்டிருப்பதைக் காண முடிகிறது.

கர்ம எண் 7 கேதுவை குறிக்கும் எண். சோதிடத்தில் இராகுவிற்கும் கேதுவிற்கும் சொந்த இராசி கிடையாது. ஈழத்திலுள்ள பஞ்சாங்கங்களில் இராகு, கேது என்ற இரு கிரகங்களும் விருச்சிக ராசியில் உச்சம் பெறுகிறார்கள் என பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு சாயாக் கிரகங்களும் ஒரே இடத்தில் நிச்சயம் உச்சம் பெற முடியாது என உலகப் புகழ் பெற்ற சோதிட மாமேதை **B.V. RAMAN** உட்பட பல சோதிடர்கள் கணித்துள்ளார் கள். பல பிரபல சோதிட ஆராச்சியாளர்களின் முடிவின் படி கேது கிரகம் மட்டுமே விருச்சிகத்தில் உச்சம் பெறு கிறது. இப்படி கிரக அமைப்பு ஜாதக குறிப்பிலுள்ள வருக்கு, கேதுவால் அதிக பாதகம் ஏற்படாது. எந்த இலக்கினத்தில் பிறந்தவருக்கும் இராகுவும் கேதுவும் கெட்ட கிரக பார்வையற்று உபச்சாய வீடுகளாகிய 3, 6, 10, 11 ஆம் இடங்களில் இருப்பின் நன்மை செய்யும் என்பது சாஸ்திர நிபுணர்களின் கருத்து.



கர்ம எண் 7 வரும் தினங்களை அவதானித்து வாசகர்கள் அந்த எண் வரும் தினங்களில் என்னென்ன நடக்கும் மென்பதை அறிந்து கொள்வது சுலபம். இவர்கள் பெயரெண்ணை 5 அல்லது 6-இல் அமைத்து வாழ்க்கையில் முன்னேற்றத்தை காணலாம்,

## பெயர் எண் 7

எண் 7: இவர்கள் வாழ்க்கையில் மகா காரியங்களைச் சாதிக்கலாம், விடா முயற்சி இருந்தால் மட்டுமே.

எவ்விஷயத்திலும் உறுதியாக நின்று சாதிக்கும் திறன் சிலருக்கு குறைந்திருக்கும்.

எண் 16: இவர்கள் ''உயர்வு தாழ்வும் ஒரு வழி நில்லா'' என்ற பழமொழி இவர்களுக்கு முற்றும் பொருந்தும்.

உயர்ந்த நிலையை எளிதாக எய்தி, தாழ்ந்த நிலையையும் விரைவாகவே இவர்கள் காண்பார்கள்.

எப்போதும் விழிப்போடு இருந்து நிதானப் போக்கோடு இவர்கள் செயலாற்ற வேண்டும்.

எண் 25: இவர்கள் வாழ்க்கையில் சிக்கல் நிறைந்து காணப்பட்டாலும் ஆன்மிகப்பற்றினாலும்

எந்த விஷயத்தையும் திட்டமிட்டு செய லாற்றும் திறனாலும் சோதனைகளை வென்று சாதனை படைக்கலாம்.

உழைப்பு! உழைப்பு! உழைப்பு! இதுவே இவர் களது தாரக மந்திரமாக இருக்க வேண்டும்.

எண் 34: இந்த பெயர் எண்காரர்கள் செல்வாக்கை இலகுவாகப் பெறுவார்க்ள.

ஆனால் இயல்பாகவே அலைபாயும் மனத்தை உடைய இவர்கள் மது, மங்கை போன்ற விஷயங்களில் தம்மை மறக்காது நிதான புத்தியோடு இருந்தால் மேல் நிலை காணலாம்.

எண் 43: இவர்கள் நாவடக்கி வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்.

''யாகாவாராயினும் நாகாக்க'' என்று வள்ளுவர் சொன்னது இவர்களுக்கு மிகவும் பொருந்தும்.

வாழ்க்கையில் எடுத்த கருமத்தை உறுதி யோடு - கோபத்தை அடக்கிச் செயற்படுத்து வார்களே யானால் வெற்றிகள் இவர்களை வந்து சரணடையும்.

இவர்களுடைய ஞானத்திற்கேற்ற கீர்த்தி கடின உழைப்பின் மூலமே கிட்டும்.



எண் 52: இவர்கள் மிக எளிதாகத் தமது அறிவுத் திறனாலும், உழைப்பினாலும் வாழ்க்கையில் மகிழ்ச்சியையும் சமூகத்தில் மாரியாதையை யும் பெறுவார்கள்.

எண் 61: இவர்கள் எந்த விஷயத்திற்கும் கடின உழைப்பைக் கைக் கொள்ள வேண்டும்.

இவர்களுக்கு வாழ்வில் முற்பகுதியை விட பிற்பகுதி மிகச்சிறப்பாக அமையும். தமது மன உறுதி, தீவிர முயற்சி இவர்களுக்கு நிச்சய வெற்றியைத் தரும்.

எண் 70: இவர்களுக்கு ஆயிரம் கஷ்டங்கள் வந்து அலை அலையாய் மோதினாலும் திட மனத்துடன் அயராது உழைத்து வாழ்வில் முன்னேறலாம்.

எண் 79: இவர்கள் மிக இலகுவாக அடுத்தவர்களைக் கவருவார்கள். வாழ்கையில் ஏதோ ஒரு தொழிலில் தமது திறமையை அற்புதமாக வெளிப்படுத்துவார்கள்.

புன்னகைத்த முகம், புத்தி கூர்மை இவை இரண்டும் இவர்களுக்கு மேல் நிலையை வழங்கும்.

எண் 88: இவர்கள் அன்பான இதயத்தால், பிறருக்குத் தொண்டு செய்யும் இயல்பால் வாழ்வில் உயர்ந்த நிலையைப் பெறுவார்கள்.

எண் 97: இவர்கள் ஆன்மிக பலத்தால் கலாஞானத்தால் வாழ்வில் என்றும் பிரகாசிப்பார்கள். அடுத் தடுத்து இவர்களுக்கு நல்லன வாழ்வில் நேரும் வாய்ப்புகள் அதிகம்.

எண் 106: இவர்கள் வாழ்க்கையில் சில வழிகளில் வெற்றியும் பல வழிகளில் தோல்வியும் ஏற்பட வாய்ப்பு உண்டு.

அசையாத மன உறுதி, புத்தி பூர்வமான செயற்பாடு இவற்றின் மூலம் இவர்கள் நிவாரணம் காணலாம்.

## *எண்கணித சோதிடத்தில் - கர்ம எண் 7*

## KARMIC NUMBER - 7

**Examples**

1. Fiidel Castro, Cuban revolutionary and political leader, born near Biran, the son of a sugar planter,

   **Date of birth: 13 - 8 - 1927**

   திகதி எண் : 4

   விதி எண் : 4

   கர்ம எண் : 7



2. Abraham Lincoln, American Republican statesman and 16th President, born in a log cabin on a farm near Hodgenville in Hardin county, Kentucky, the son of a carpenter.

   **Date of birth: 12. 2. 1809**

   திகதி எண் : 3

   விதி எண் : 5

   கர்ம எண் : 7

3. Elizabeth Taylor, English film actress and Oscar winner in 1960 and 1966, born in London.

   **Date of birth: 27 - 2 - 1932**

   திகதி எண் : 9

   விதி எண் : 8

   கர்ம எண் : 7

4. Elvis Presley, born at Tupelo in Mississippi the surviving brother of twins.

   **Date of birth: 8 - 1 - 1935**

   திகதி எண் : 8

   விதி எண் : 9

   கர்ம எண் : 7

5. Marilyn Monroe, American film actress and sex symbol, born at Los Angeles in California as Norma Jean Baker.

   **Date of birth: 1 - 6 - 1926**

   திகதி எண் : 1

   விதி எண் : 7

   கர்ம எண் : 7

6. Solomon Bandaranaike, Prime Minister of Sri Lanka, born at Colombo the capital.

**Date of birth: 8 - 1 - 1899**

திகதி எண் : 8

விதி எண் : 9

கர்ம எண் : 7

7. Ronald Reagan, American Republican statesman and 40th President, born at Tampico in Illinois.

**Date of birth: 6 - 2 - 1911**

திகதி எண் : 6

விதி எண் : 2

கர்ம எண் : 7

8. Britain suffered its worst undergroung train disaster at London's Moorgate tube tation, when 42 were killed.

**Date of event: 28 - 2 - 1975**

திகதி எண் : 1

விதி எண் : 7

கர்ம எண் : 7

9. Marlon Brando, American film actor and twice Oscar winner, born at Omba in Nebraska

**Date of birth: 3 - 4 - 1924**

திகதி எண் : 3

விதி எண் : 5

கர்ம எண் : 7



10. Lady Diana Spencer, to become the Princess of Wales, born at Park House at Sandringham.

**Date of birth: 1 - 7 - 1961**

திகதி எண் : 1

விதி எண் : 7

கர்ம எண் : 7

11. England won the World Cup at football, beating West Germany 4 - 2 at Wemblay Stadium in London.

**Date of event: 30 - 7 - 1966**

திகதி எண் : 3

விதி எண் : 5

கர்ம எண் : 7

12. Dustin Hoffman, American film actor, born at Los Angless in California.

**Date of birth: 8 - 8 - 1937**

திகதி எண் : 8

விதி எண் : 9

கர்ம எண் : 7

13. Sean Connery, British film actor, born at Edinburgh as Thomas Connery.

**Date of birth: 25 - 8 - 1930**

திகதி எண் : 7

விதி எண் : 1

கர்ம எண் : 7

14. Requel welch, American film actress and sex symbol, born at Chicago in Illionis, with the maiden name of Jo-Raquel Tejada, of a Bolivian father.

**Date of birth: 5 - 9 - 1942**

திகதி எண் : 5

விதி எண் : 3

கர்ம எண் : 7

15. Mrs Thatcher, Conservative politician and Britain's first woman Prime Minister, born as Margaret Roberts.

**Date of birth: 13 - 10 - 1925**

திகதி எண் : 4

விதி எண் : 4

கர்ம எண் : 7

16. Rock Hudson, American film actor, born at Winnetta in Illinois as Roy Scherer.

**Date of birth: 17 - 11 - 1925**

திகதி எண் : 8

விதி எண் : 9

கர்ம எண் : 7

17. Willy Brandt, German statesman and Chancellor, born at Lubeck as Kari Herbet Frahm.

**Date of birth: 18 - 12 - 1913**

திகதி எண் : 9

விதி எண் : 8

கர்ம எண் : 7



18. Ringo Starr, the drummer of the Beatles Pop group, born in Liverpool as Richard Starkey.

**Date of birth: 7 - 7 - 1940**

திகதி எண் : 7

விதி எண் : 1

கர்ம எண் : 7

# கர்ம எண்-8 (சனி)

## KARMIC NUMBER - 8 (SATURN)

| பிறந்த தேதி எண் | கூட்டு / விதி எண் | கர்ம எண் |
|---|---|---|
| 1,10,19,28 | 3 | 8 |
| 2,11,20,29 | 2 | 8 |
| 3,12,21,30 | 1 | 8 |
| 4,13,22,31 | 9 | 8 |
| 5,14,23 | 8 | 8 |
| 6,15,24 | 7 | 8 |
| 7,16,25 | 6 | 8 |
| 8,17,26 | 5 | 8 |
| 9,18,27 | 4 | 8 |

கர்ம எண் 8-இல் அமையும் இலக்கத்தில் பிறந்தோர் சனி பகவானின் ஆட்சியில் அமைந்தவர்கள்.

வாழ்க்கையில் மிகப்பல சோதனைகளைச் சந்திக்க வேண்டி வந்தாலும் சனி பகவானின் கடாட்சத்தில் பல நன்மைகளைப் பெற வாய்புகள் உண்டு.



கர்ம எண் 8-இல் பிறப்போர் அனைவருமே சனிபகவான் ஆட்சிக்கு உட்பட்டவர்களே ஆவர்.

எத்தனை துன்பங்கள் வந்தாலும் இறைவனை வணங்கி, நிதானமாகச் செயல்பட்டு வாழ்வில் முன்னேற இயலும்.

**சிறப்பியல்புகள்:**

இவர்கள் பிறரை விரைவாக நம்ப மாட்டார்கள்.

தனிமையை நாடிப் போவார்கள் எந்த விஷயம் பற்றிச் சிந்தித்தாலும் இனம் புரியாத ஏக்கங்கள் இவர்களை எப்போதும் ஆட்டிப் படைக்கும்.

நான் முன்பே கூறியபடி, ஆன்மிக உறுதிப் பாட்டுடன் அயராது உழைத்தால் இவர்கள் மேலான நிலை பெற வாய்ப்பு உண்டு.

சனீஸ்வரனை பற்றி பல சோதிட புத்தகங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. இருந்தும் கிரக நிலைப் பாட்டில் சில இலக்கினங்களுக்கு அவர் யோக காரகன். அவர் ஆட்சி, உச்ச வீடுகளிலிருந்தாலும், யோக காரகனாக இருந்தாலும் மிகச்சிறந்த பலன்களை தனது திசை, புத்தி களில் செய்வார் என்பது எனது அனுபவத்தில் கண்ட உண்மை. கர்ம எண் 8 வரும் தினத்தில் பிறந்தவர்கள் பெயர் எண்ணை 5 அல்லது 1இல் வைத்துக் கொள்வது

மிக அவசியம். ஒருவர் வழக்கமாக அழைக்கப்படும் பெயர் மேற் குறிப்பிட்ட 5 அல்லது 1இல் இயற்கை யாகவே அமைந்துவிட்டால் அவர் முன்னேற்றப்பாதை யில் தடங்கல்களை அதிகம் எதிர் நோக்க வேண்டிய அவசியம் ஏற்படாது எனத் திட்ட வட்டமாக நம்பலாம்.

## பெயர் எண் 8

எண் 8: இவர்கள் நல்ல முறையில் உழைத்து முன்னேறத் துடிப்பவர்கள். மனம் சாந்தமான போக்கிலே அமைந்திருக்கும்.

ஆன்மிக வேட்கை இவர்களை ஆட் கொள்ளும். நேர்வழியை இவர்கள் பின்பற்ற முனைவார்கள்.

எண் 17: இவர்கள் தமது இடை விடாத முயற்சியால் சமூக செல்வாக்கும் பெருத்த செல்வமும் பெற வாய்ப்புண்டு.

படிப்படியாக இவர்களுக்கு புகழ் கிட்டி அது நிலைத்திருக்கும்.

எண் 26: இவர்கள் எந்த நல்ல காரியத்தைச் செய்தாலும் அதை பிறர் எளிதில் பாராட்ட மாட்டார்கள். ஆனால் விரோதிகள் பலர் தோன்றுவார்கள்.



ஒரு காரணமும் இன்றி பிறருடைய ஏச்சுக்கும் ஏளனத்திற்கும் உள்ளாக வேண்டி வரும்.

ஆன்மிகப் பற்று அயரா உழைப்பு இவற்றால் இவர்களும் வாழ்வில் வெற்றி பெறலாம்.

எண் 35: இவர்கள் எந்த விஷயத்திலும் விழிப்போடு இருந்து பணியாற்ற வேண்டும்.

தேவை இல்லாமல் பிரச்சனை வரும் என்பதால் நாவை அடக்கிப் பேச கற்றுக் கொள்ள வேண்டும். தொடர் முயற்சி வெற்றியைத் தரும்.

எண் 44: இவர்கள் சந்தோஷ வாழ்வும் செல்வ செழிப் பும் பெறும் வாய்ப்புக்கள் உண்டு.

ஆனால் அதைத் தங்கள் நேர்மையாலும் சாந்தப் போக்கினாலும் தக்க வைத்துக் கொள்ள வேண்டும்.

மனம் போன போக்கில் போனால் வாழ்வே பாழாகி விடலாம்.

எண் 53: இவர்கள் வாழ்வில் எதற்கும் பின்வாங்காது கடினமாக உழைத்து முன்னேற முடியும்.

பல பிரச்சனைகளை இவர்கள் சந்திக்க நேர்ந்தாலும் திட மனத்தோடு உழைத்தால் வெற்றி காண போதிய வாய்ப்பு உள்ளது.

எண் 62: இந்த பெயர் எண் நல்ல பலன் தரும் என்று தயங் காமல் கூறலாம்.

சமூக செல்வாக்கு, செல்வம் மிகுந்து வர வாய்ப்புகள் இவ்வெண்ணில் அதிகம் என்று கூறலாம்.

இந்த எண்காரர்கள் அறிவுத் திறனால் சோதனை களையும் சாதனைகளாகக்கிக் கொள்வார்கள்.

எண் 71: இவர்கள் பல வழிகளில் முயன்று வாழ்க்கை யில் எந்த வழியிலாவது தமது அயராது உழைப்பின் மூலம் முன்னேறி விடுவார்கள்.

எண் 80: அலையின் சீற்றம் மிகுந்த கடலில் தமது பயணத்தை மேற்கொள்வோன் நிலையே இவர்கள் நிலை.

மனத்திடம், புத்தி பூர்வமான செயற்பாடு இவற்றால் வெற்றிகரமாக இவர்கள் கரை சேர்ந்து விடலாம்.



எண் 89: இவர்கள் வாழ்வின் செல்வங்களைப் பெறு வார்கள்.

அனைவரும் விரும்பும் படியாக இவர்களால் வாழ இயலும்.

எண் 98: இவர்கள் வாழ்க்கை ஏற்ற இறக்கத் தோடு தான் காணப்படும்.

ஆன்மிக பலம், தீவிர உழைப்பு இவற்றால் வாழ்வில் முன்னேற முடியும்.

எண் 107: இந்த பெயர் எண் அமைந்தோர்க்கும் கைக்கு வந்தது மாயமாகிவிடும் வாய்ப்புகள் அதிகமுள்ளது.

ஆனால் ஏதோ ஒரு வகையில் சமூகத்தில் கௌரவத்தை இவர்கள் பெறுவார்கள்.

# எண்கணித சோதிடத்தில் - கர்ம எண் 8

# KARMIC NUMBER - 8

**Examples**

1. Benjamin Franklin, American Statesman, scientist and writer, born at Boston in Massachusetts, the 15th of 17 Children.

   **Date of birth: 17 - 1 - 1706**

   திகதி எண் : 8

   விதி எண் : 5

   கர்ம எண் : 8

2. Rex Harrison, English stage and film actor and Oscar winner in 1964, born at Huyton in Liverpool as Reginald Carey.

   **Date of birth: 5 - 3 - 1908**

   திகதி எண் : 5

   விதி எண் : 8

   கர்ம எண் : 8

3. Gregory Peck, American film actor, born at La Jolla in California

   **Date of birth: 5 - 4 - 1916**

   திகதி எண் : 5

   விதி எண் : 8

   கர்ம எண் : 8



4. Norman wisdom, English comedy actor, born as Norman wisden.

   **Date of birth: 4 - 2 - 1920**

   திகதி எண் : 4

   விதி எண் : 9

   கர்ம எண் : 8

5. Fidel Castro became Prime Minister of Cuba after over-throwing the regime of Fulgencio Batista.

   **Date of event: 16 - 2 - 1959**

   திகதி எண் : 7

   விதி எண் : 6

   கர்ம எண் : 8

6. Rod steiger, American film actor and Oscar winner, in 1962. born at Westhampton in the State of New York.

   **Date of birth: 14 - 4 - 1925**

   திகதி எண் : 5

   விதி எண் : 8

   கர்ம எண் : 8

7. Judy Garland, American film actress and singer, born in Minnesota as Frances Ethel Gumm, of vaudeville parents.

   **Date of birth: 10 - 6 - 1922**

   திகதி எண் : 1

   விதி எண் : 3

   கர்ம எண் : 8

8. Gerald Ford, American Republican statesman and 38th President, born at Omaha in Nebraska as Leslie King Junior.

**Date of birth: 14 - 7 - 1913**

திகதி எண் : 5

விதி எண் : 8

கர்ம எண் : 8

9. Erle Stanley Gardner, American crime novelist and creator of the detective character 'Perry Mason', born at Malden in Massachusetts.

**Date of birth: 17 - 7 - 1889**

திகதி எண் : 8

விதி எண் : 5

கர்ம எண் : 8

10. Benito Mussolini, Italian statesman and Fascist dictator, born at Predappion near forli, the son of a blacksmith.

**Date of birth: 29 - 7 - 1883**

திகதி எண் : 2

விதி எண் : 2

கர்ம எண் : 8

11. Gary Sobers of Nottinghamshire became the first cricketer to score 6 sixes off an over, at Swansea against Glamorgan - bowled by Malcolm Nash.

**Date of event: 31 - 8 - 1968**

திகதி எண் : 4

விதி எண் : 9

கர்ம எண் : 8



12. Agatha Christie, English detective story writer, born at Torquay in Devon.

**Date of birth: 15 - 9 - 1891**

திகதி எண் : 6

விதி எண் : 7

கர்ம எண் : 8

13. Roger Moore, English film actor, born at Stock well in London, the son of a policeman.

**Date of birth: 14 - 10 - 1928**

திகதி எண் : 5

விதி எண் : 8

கர்ம எண் : 8

14. Alfred Nobel, Swedish chemist and inventor of dynamite in 1867, born at Stockholm.

**Date of birth: 21 - 10 - 1833**

திகதி எண் : 3

விதி எண் : 1

கர்ம எண் : 8

15. Indira Gandhi, Indian states woman and first woman Prime Minister of her country, born at Allahabad, the daughter of Jawaharlal Nehru.

**Date of birth: 19 - 11 - 1917**

திகதி எண் : 1

விதி எண் : 3

கர்ம எண் : 8

16. Kirk Douglas, American film actor, born at Amsterdam in New York to Russian - Jewish parents as Issur Danielovitch Demsky.

**Date of birth: 9 - 12 - 1918**

திகதி எண் : 9
விதி எண் : 4
கர்ம எண் : 8

17. Henry Armstrong, American boxer, known as 'Homicide Hank', who held titles at 3 weights simultaneously, born at Columbus in Mississippi as Henry Jackson.

**Date of birth: 12 - 12 - 1912**

திகதி எண் : 3
விதி எண் : 1
கர்ம எண் : 8

18. Mao Tse - Tung, Chinese statesman and one of the founders of the Communist Party, born in Hunan the son of a peasant farmer.

**Date of birth: 26 - 12 - 1893**

திகதி எண் : 8
விதி எண் : 5
கர்ம எண் : 8

19. A violent earthquake occurred at Abruzzi in Italy, destroying the town and killing some 15,000 inhabitants.

**Date of event: 3 - 11 - 1706**

திகதி எண் : 3
விதி எண் : 1
கர்ம எண் : 8

# கர்ம எண்-9 (செவ்வாய்)

## KARMIC NUMBER - 9 (MARS)

| பிறந்த தேதி எண் | கூட்டு / விதி எண் | கர்ம எண் |
|---|---|---|
| 1,10,19,28 | 8 | 9 |
| 2,11,20,29 | 7 | 9 |
| 3,12,21,30 | 6 | 9 |
| 4,13,22,31 | 5 | 9 |
| 5,14,23 | 4 | 9 |
| 6,15,24 | 3 | 9 |
| 7,16,25 | 2 | 9 |
| 8,17,26 | 1 | 9 |
| 9,18,27 | 9 | 9 |

செவ்வாயின் ஆதிக்கத்திற்குக் கட்டுப்பட்டவர்கள் இந்த எண்காரார்கள்.

கர்ம எண் 9-இல் அமையும் எண்காரர்கள் எல்லாரும் இந்த செவ்வாய்க்குள் அடங்கியிருப்போரே.

## பொதுவான குணங்கள்

இவர்கள் தமது அறிவினால் எந்தக் காரியத்தையும் சாதிக்கும் சாமர்த்தியம் மிக்கவர்கள்.

மிகவும் தந்திரமாக நடந்து வெற்றியடையும் திறன்படைத்தவர்கள்.

போர்க்குணம் இவர்களுக்கு இயல்பாக உள்ளது.

அதனால் இவர்கள் நாட்டுக்காக, மொழிக்காக, அல்லது சொந்த வாழ்வின் மேன்மைக்காக பொதுவில் எந்த விஷயத்திற்காகவும் போராடத் தயங்க மாட்டார்கள். இவர்கள் எந்த விஷயத்திலும் சுதந்திரமாகச் செயற்பட வேண்டுமென்ற உணர்ச்சிமிக்கவர்கள்.

எந்த விஷயத்திலும் எவரும் இவர்களைக் கட்டுப் படுத்த முடியாது.

9ஆம் எண்காரர்கள் தமது போர்க்குணத்தால் - தந்திரத்தினால் தம்மை எதிர்ப்போரை சுலபமாக வெற்றி கொள்வார்கள்.

மூர்க்கத்தனமாகச் சென்று மூக்குடை படாமல் வளைவது போல் வளைந்து, நெளிவது போல் நெளிந்து தமது காரியங்களை முடித்துக் கொள்வார்கள்.



இவர்கள் போர்க்குணம் மிக்கவர்கள் என்றாலும் ஆன்மிகப் பற்றும், பிறர்க்குதவும் மனிதானபிமானம் போன்ற குணங்களும் இவர்களுக்கு இருக்கும். இவர்களின் ஆதிக்கக் கிரகமான செவ்வாய் வலிமை குன்றும் போது இந்த 9ஆம் எண் கொண்டோர் சோம்பல் மிக்கவர்களாகவும், பிறரைச் சார்ந்து அடிமை நிலையிலும் வாழ வேண்டி வரும்.

சுயநலப் போக்கும் கூட வந்து சேர்ந்து கொள்ளும். ஒழுக்கம் தவறி நடப்பதற்கு தயங்க மாட்டார்கள்.

ஆனால் இயல்பான அறிவுத் திறனால் பொதுவாக இவர்கள் நன்மையான காரியங்களைச் செய்யவே விரும்புவார்கள். சிலரோ மகாகாரியங்களைச் செய்து பெரும் பெயரைச் சம்பாதிக்கும் வாய்ப்புகள் அதிகமாக உள்ளது.

செவ்வாய் கிரகமும் தீய கிரகமாக கருதப்படினும் எண் சோதிடத்தில் இது ஒரு நல்ல எண்ணாகத்தான் கருதப்பட்டு வருகிறது. ஒருவர் ஜாதகக் குறிப்பில் செவ்வாய் 1, 2, 4, 7, 8,12 ஆகிய இடங்களில் இருந்தால் செவ்வா தோஷம் என பல ஆண்டு காலமாக நம்பப்பட்டு வருகிறது. இருந்தாலும் கர்ம எண் 9 அனுபவ ரீதியாக நல்ல பயன் செய்யும் எண் என்பது எல்லாருக்கும் தெரிந்த உண்மை.

செவ்வாய் கிரகம் ஆட்சி உச்ச, நட்பு வீடுகளிலோ அல்லது குறிப்பாக சில இலக்கினங்களில் பிறந்தவர்களுக்கோ யோக காரகனாக அமைந்து பாபக்கிரக பார்வையற்றிருப்பின் நல்ல பலனை செய்யுமென்பது சோதிட ரீதியான முடிவு.

கா்ம எண் 9 ஆக வரும் தினத்தில் பிறந்தவா்கள் பெயரெண்ணை 3, 5, 6 அல்லது 9இல் வைத்துக் கொண்டால் முன்னேற்றத்தை காணலாம் என்பது எனது ஆராய்ச்சியாலும் அனுபவத்தாலும் அறிந்த உண்மை.

**பெயா் எண்:**

எண் 9: இவா்கள் ‘ஏதோ பிறந்து விட்டோம், ஒரு நாளில் இறந்து விடுவோம்’ என்ற மனப் போக்கில் ஏனோ தானோ என்று வாழ மாட்டார்கள்.

மனதில் உறுதி, வாக்கினில் இனிமை இவற்றோடு வாழ்வில் பல பெரிய கருமங்களைச் செய்வார்கள்.

இவா்களுக்கு வரும் எதிர்ப்புகள் மின்னல் போல் மறைந்து விடும்.

எண் 18: இவா்கள் எவ்விஷயத்திலும் மிகவும் பொறுமையோடு செயலாற்ற வேண்டும்.

ஆழமான சிந்தனை பிறகு, தீவிரமான செயற்பாடு இவா்களுக்கு வாய்த்தால் இவா்கள் கண்டிப்பாக வெற்றி பெறலாம்.



இவா்கள் எவ்விஷயத்திலும் உணா்ச்சி வசப் படும் இயல்பை மாற்றிக் கொள்ள வேண்டும்.

எண் 27: இவா்கள் பிறரை கவரும் புத்தி சாலிகளாக இருப்பார்கள்.

மற்றவா்களை கட்டுப்படுத்தும் தகுதி இவா்களுக்குத் தாமாகவே அமையும்.

வாழ்க்கையில் நல்ல காரியங்களைச் செய்து பிறா் பாராட்டை இவா்கள் பெறுவார்கள். இவா்கள் வாழ் நாள் எல்லாம் அறிவின் பலத்தால் பிரகாசிப்பார்கள்.

எண் 36: இந்த பெயா் எண்காரா்கள் திரைகடலோடித் திரவியம் தேடுவார்கள். இருந்த இடத்தில் இருந்தாலும் வீழ்ச்சிகள் இவா்களுக்கு ஏற்பட வாய்ப்புகள் மிகக் குறைவு.

ஆனால் நல்ல நண்பா்களோ நல்ல மனைவியோ கிடைப்பது சற்று கஷ்டம் போல் உள்ளதால், மணம் முடிப்பதற்கு முன் நன்றாகச் சிந்தித்து எண் பொருத்தம் பார்த்தும் தேர்ந்தெடுக்க வேண்டும். நண்பா்களை நன்கறிந்தே பழகவேண்டும். தேர்ந்தெடுக்க வேண்டும்.

எண் 45: இவா்கள் உழைத்து முன்னேற வேண்டும் என்பது இவா்களின் இதயத் துடிப்பாக இருப்பதால் கால மகளின் வெற்றி மாலைகள் இவா்கள் கழுத்தை அலங்கரிக்கும்.

இன்மொழி பேசி, எப்போதும் புன்னகை முகத்தோடு இருக்கும் இவர்கள் வாழ்க்கை எப்போதும் ஆனந்தம் நிரம்பியதாகவே இருக்கும்

எண் 54: இவர்கள் தமக்கு அமைந்த மூர்க்கத்தனமான பிடிவாதப் போக்கை உடனே கைவிட்டு தெளிவாகச் சிந்தித்துச் செயல்பட்டால் வாழ்க்கையின் இன்பரசத்தை அள்ளிப் பருகலாம். செல்வமும் மகிழ்ச்சியும் கூடி வரும்.

எண் 63: இவர்கள் தமது மனத்தை நேர்மையான பாதையில் செலுத்தி, அறிவைத் தக்கவாறு பயன்படுத்தினால் பல முன்னேற்றங்களைத் தம் வாழ்க்கை யில் காணலாம்.

முறை தவறி வாழ முற்பட்டால் வாழ்வே சூன்யமாகி விடும்.

எண் 72: இவர்கள் தமது நன் முயற்சியால் வெற்றி பெறலாம். முதலில் இவர்கள் "அதுவா இதுவா?" என்ற சலனப் புத்தியை விட வேண்டும்.

எதையும் தெளிவான நம்பிக்கையோடு செய்யப் பழக வேண்டும்.

அப்படியானால் செல்வமும் செல்வாக்கும் இவர்களை நாடி வரும்.



எண் 81: இந்த பெயர் எண் உடையோர் முன் யோசனையோடு எந்த செயலிலும் இறங்க வேண்டும்.

இவர்களுடைய அறிவும் செயற்பாடும் இவர்கள் வாழ்க்கையை உயர்த்தும் என்பது உண்மை.

எண் 90: இவர்கள் அயராத உழைப்பினால் வெற்றி காணலாம்.

ஆன்மிக பலத்தால் அழியாத புகழைப் பெறலாம்.

எண் 99: இவர்கள் மிகவும் நிதானமாக நடக்கப் பழக வேண்டும்.

இவர்களுக்கு காரணம் இல்லாமலேயே எதிரிகள் உண்டாகி விடுவார்கள்.

ஆன்மிக வழியில் - சாந்த மொழி பேசி அனைவரையும் அனுசரித்துப் போனால் வாழ்வில் முன்னேற முடியும்.

எண் 108: இந்த எண் அமைந்தால் வாழ்க்கை சிறப்பாக அமையும் எனக் கூறலாம்.

நினைப்பு நல்லதாக அமைந்தால் வெற்றி நிச்சயம் எனக் கூறலாம்.

# எண்கணித சோதிடத்தில் - கர்ம எண் 9

# KARMIC NUMBER - 9

**Examples**

1. Marilyn Monroe, American film actress and sex symbol tragically died in Los Angeles aged 36

**Date of death: 5 - 8 - 1962**

திகதி எண் : 5

விதி எண் : 4

கர்ம எண் : 9

2. Richard Attenborough, English film actor, producer and director, born at Cambridge.

**Date of birth : 29 - 8 - 1923**

திகதி எண் : 2

விதி எண் : 7

கர்ம எண் : 9

3. Quaddhafi or Gadafy became Head of State of Libya, after leading a military coup overthrowing king Idris I.

**Date of event: 1 - 9 - 1969**

திகதி எண் : 1

விதி எண் : 8

கர்ம எண் : 9



4. Oscar Wilde, Irish poet and dramatist, died in poverty and exile in Paris, having adopted the name of Sebastian Melmoth.

**Date of death: 30 - 11 - 1900**

திகதி எண் : 3

விதி எண் : 6

கர்ம எண் : 9

5. Martin Lutherking American Black civil rights leader and Nobel peace prize winner 1964, was assassinated at his motel at Memphis in Tennessee - the alleged assassin was James Earl Ray.

**Date of death: 4 - 4 - 1968**

திகதி எண் : 4

விதி எண் : 5

கர்ம எண் : 9

6. Al Capone, American gangster and leader of organised crime in Chicago during Prohibition, died as a result of a massive brain haemorrhage - and virtually penniless.

**Date of death: 25 - 1 - 1947**

திகதி எண் : 7

விதி எண் : 2

கர்ம எண் : 9

7. Queen Elizabeth II, as Princess Elizabeth, married Prince Philip in Westminster Abbey.

**Date of marriage: 20 - 11 - 1947**

திகதி எண் : 2

விதி எண் : 7

கர்ம எண் : 9

# பெயர் மாற்றம் - சில முக்கிய குறிப்புகள்

பெயர் மாற்றம் செய்வது பற்றி நான் வாசகர்களுக்கு கூற விரும்பும் முக்கியமானவற்றை இங்கே தருகிறேன்.

ஒருவர் தமது கர்ம எண்ணை மிகச் சரியாக அறிந்து சரியான ஆங்கில உச்சரிப்புப்படி - அந்த உச்சரிப்பு பிறர் அவரை அழைக்கும்போது பிசகாத வண்ணம் பெயர் மாற்றத்தைச் செய்தால் தொடர்ந்து எல்லாக் காரியங் களையும் ஒரே சீருடன் செய்து அவர் மேல் நிலையை, முன்னேற்றத்தை தமது வாழ்க்கையில் அடையலாம்.

இந்த நூலில் நான் முன்பே பெயர் எண் 2, 4, 7, 8 என்ற எண்ணுக்குள் அமைந்தால் அவர்களுக்கு என்ன பலன் நேரும் என்பதை கூறியுள்ளேன்.

உதாரணமாக ஒருவர் பெயர் மேற் குறிப்பிட்ட எண்களில் ஏற்கனவே அமைந்திருந்தால் அதை நான் ஒவ்வொரு கர்ம எண் அத்தியாயத்திலும் குறிப்பிட் டிருப்பது போல் எண்களுக்கு அமைய அவர் பெயரை மாற்றிக் கொண்டால் முன்னேற்றத்தை வாழ்க்கையில் காணலாம் என்பது எனது அனுபவத்தில் கண்ட உண்மை.

எண் கணித சோதிடப்படி பெயரை ஒருவர் மாற்றம் செய்து கொள்ளும் முன்பு தமது கர்ம எண்ணுக்கு அது பொருந்தி வருகிறதா என்பதை மிகச் சரியாகக் கவனித்தே பெயரை மாற்ற வேண்டும்.

சில வேளையில் எவ்விதத்திலும் எவ்வித சிறப்பும், தகுதியும் இல்லாத ஒருவன் திடீரென மற்றவர்கள் வியக்கும் ஒரு பணி செய்து விடுகிறான். இது அவன் கர்ம எண் பலத்தால் செய்து விட்டதாகக் கருத முடியாது.

இதைத்தான் ஞானபுருஷர் விவேகானந்தர், ''நீங்கள் ஒருவரது உண்மையான குணத்தை அறிய விரும்பினால் அவரது மகத்தான ஒரு காரியத்தை மட்டும் வைத்து எந்த முடிவுக்கும் வராதீர்கள். முட்டாள்கள் கூட எப்போதாவது சில சமயங்களில் வியக்கத்தக்க செயல்களை செய்து விட முடியும். ஒருவன் மிகமிகச் சாதாரண செயல்களைச் செய்யும் போது கவனியுங்கள். அவையே அவனது உண்மையான குணத்தைத் தெரிவிப்பவை. எந்தச் சூழ்நிலையிலும் யாருடைய குணம் எப்போதும் உயர்ந்த தாகவே இருக்கிறதோ அவனே உண்மையில் சிறந்த மனிதன்.'' என்று கூறுகிறார்.

இதில் வாசகர்களுக்கு நான் கூற விரும்புவது என்னவென்றால் ஒருவர் தமது கரும எண்ணை மிகச் சரியாக அறிந்து - சரியான ஆங்கில உச்சரிப்புப்படி - அந்த உச்சரிப்பு பிறர் அவரை அழைக்கும் போது பிசகாத வண்ணம் பெயர் மாற்றத்தைச் செய்தால் தொடர்ந்து அப்

பெயரை பொருத்தமாக அமைப்பதன் மூலம் ஒருவர் அவருக்கு அதற்கு முன்னர் பிறப்பு விதியின் (Presumptive Fate) மூலம் வந்திருக்கக் கூடிய வில்லங்கங்கள் துயரங்களில் இருந்து விடுபட்டு தமது வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க சில நல்ல மாற்றங்கள் நேரக் காணலாம்.

ஒவ்வொரு கர்ம எண்ணுக்கும் வாழ்க்கையில் வெற்றிச் சிகரங்களைத் தொட்ட பலரை உதாரணங் களாகக் காட்டலாம்.

இதில் முக்கியமாக கவனிக்க வேண்டியது என்ன வென்றால் ஒருவர் தமது பெயரை ஆங்கில எழுத்துகளில் எழுதும் போது அந்த உச்சரிப்பு - எந்த விதத்திலும் மாறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

எடுத்துக்காட்டாக

ஒருவர் காந்தன் என தமிழில் அழைக்கப்படுகிறார் என்று வைத்துக் கொள்வோம். அவர் அதை ஆங்கில எழுத்துகளில் எழுதும் போது,

**KANTHAN** என்று எழுதினால் அதைப் படிப்போர் **கந்தன்** என்றே படிப்பார்கள். **காந்தன்** என்று அவர் சரியாக உச்சரிப்பில் அழைக்கப்பட வேண்டும் என்றால் அவர் தமது பெயரை.

**KAANTHAN** என்றே எழுத வேண்டும்.

சரியான ஆங்கில உச்சிப்பு அமைய பெயரை மாற்றம் செய்வது மிகவும் அவசியம்.



எண்கணித சோதிடத்தின் படி உலகில் மிகப் புகழ் பெற்ற ஒருவரும், எந்தப் பிரபலமும் புகழும் இல்லாத சாதாரணமாக வாழும் ஒருவரும் **ஒரே ஆண்டில், ஒரே மாதத்தில் ஒரே தேதியில், ஒரே நேரத்தில்** பிறந்திருந்து பெயர் எண் வேறுபட்டு இருக்கக் கூடும்.

ஆனால் மிகப் பிரபலமான - புகழ் பெற்ற அந்த பிரமுகரைப் போல் இந்தச் சாதாரண மனிதனும் தமது பெயரை அந்த உயர் புகழ் பிரமுகர் பெயர் போன்றே மாற்றம் செய்து கொண்டால் அந்த உயர் புகழ் பிரமுகர் போல் ஆகிவிட முடியாது. ஏதோ நப்பாசையில் அந்த சாதாரண மனிதன் அவ்வாறு பெயர் மாற்றத்தையும் அதே பிரமுகரின் கூட்டு எண்ணிற்கு அமைத்துக் கொண்டால் தனது தகுதிக்கேற்ப பலன் அடையலாமே தவிர அவர் (பிரமுகர்) பெற்ற பலனை சாதாணைமானவர் அடைந்து விட முடியாது என்பதை திட்டவட்டமாகத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

உதாரணமாக எலிசபெத் மகாராணியார் (Her Majesty - Queen Elizabeth II) பிறந்த எண், கூட்டு எண், கர்ம எண் என்பன இன்னுமொருவருக்கு ஒரே மாதிரி எண்களாக அமைந்திருக்கும். மகாராணியார் பெயர் எண்ணைக்கூட்டி அதே எண்ணில் ஏனைய எண்கள் ஒரே மாதிரியாக இருக்கும் ஒருவர் - பெயரை மகாராணியார் பெயரெண்ணுக்கு ஒப்ப மாற்றி தானும் மகாராணியாகலாம் என்று நம்புவது தவறு.

# பெயர் மாற்றத்தின் விளைவுகள்

எண் கணித ஜோதிட முறைப்படி அதிர்ஷ்ட மில்லாத எண்களை வைத்து நாளாந்தம் சோதனையையும் வேதனையையும் காணும் ஒருவர் சரியான முறையில் பெயரை மாற்றிக் கொண்டால் நல்ல முறையில் தமது வாழ்வை அமைத்துக் கொள்ள முடியும்.

எண் கணிதத் தத்துவத்தின் படி, ஆங்கில எழுத்துக்கள் மூலம் ஒருவர் பெயரை மாற்றினால் மட்டுமே அதற்குரிய பலனைப் பெற முடியும்.

விதி எண்ணைப் பொறுத்துத் தான் ஒருவரது விதி பொதுவாக அமைகிறது.

இது நாம் பிறக்கும் போதே நிர்ணயிக்கப்பட்ட விஷயம் ஆகும்.

இதைத்தான் சாதாரணமாக நாம் ஒருவன் தலை எழுத்தை எவனாலும் மாற்ற முடியாது என்று கூறுகிறோம். ஆனால் கர்ம எண்ணின் பலனைப் பொறுத்துத் தான் ஒருவரது வாழ்வு அமையும்.



மேற் காணும் விடயம் திருமணத் தம்பதிக்கு மட்டுமல்லாது சேர்ந்து பழகும் நண்பர்களுக்கும், ஒருவர் பணியாற்றும் இடத்தில் அமையும் பொது உறவுகளுக்கும் பொருந்தும். திருமண தம்பதி ஒற்றுமையாக இல்லறத்தை நடத்த சோதிடர்கள் கிரக நிலைப் பொருத்தம் பார்த்து செய்யப்படும் முடிவுகளும், எண் கணித சோதிடத்தில் கர்ம எண் பிரகாரம் எடுக்கப்படும் முடிவுகளும் பொது வாக ஒத்துப்போகும் வண்ணமே இருக்கும்.

எண் சோதிட கணிப்புப் படி, சகல மனிதர்களும் 1-இல் இருந்து 9 எண்ணுக்குள் ஏதோ ஒரு எண்ணில் தான் பிறந்திருப்பார்கள் என்பது வாசகர்கள் அனைவரும் அறிந்ததே.

அவரவர் பிறந்த தேதி, மாதம், வருடத்தை கணக் கிட்டு அவரவர் தேதி எண், கூட்டு எண், கர்ம எண், முதலியவற்றை குறிப்பிட்டிருக்கிறேன். நான் தந்துள்ள மேற் குறிப்பிட்ட உதாரணங்களில் இருந்து பெயர் எண்ணை அறிந்து அந்த எண்ணுக்கு உங்கள் பெயரை மாற்றி அமைப்பதன் மூலம் நீங்களும் அந்த குறிப்பிட்ட பிரபலமான பிரமுகர் - முக்கியஸ்தர் போல ஆகிவிடலாம் என நினைப்பது தவறு, எனினும் அவ்வாறு மாற்றம் செய்வதில் ஓரளவிற்காவது முன்னேற்றத்தைக் காணலாம் என்பது அனுபவரீதியாக நான் அறிந்த உண்மை.

ஒருவர் பிறந்த தேதி எண் 3 என்றிருந்து கூட்டு/ விதி எண்ணும் 3 என்றிருந்தால் கர்ம எண் 3 ஆகும்.

அதே போன்று ஒருவரது பிறந்த தேதி எண் 6 என்றிருந்து கூட்டு/விதி எண்ணும் 6 என வந்தால், அவரது கர்ம எண் 6 ஆகும்.

இதைப் போல் ஒருவரது பிறந்த தேதி எண் 9 என்றிருந்து கூட்டு/விதி எண்ணும் 9 என வந்தால், அவருடைய கர்ம எண் 9 ஆகும்.

சுருங்கக் கூறின், பிறந்த தேதி எண் முறையே 3/6/9 என்றிருந்து கூட்டு / விதி எண்ணும் முறையே 3/6/9 என்றிருந்தால் கர்ம எண் முறையே 3/6/9 என்று தான் இருக்கும்.

### பெயர் மாற்றும் பொழுது கவனிக்க!

ஒவ்வொரு கர்ம எண்ணின் கீழ் பல பிரபல்யமான மனிதர்களின் உதாரணங்களை எடுத்துக் காட்டியுள்ளேன். முக்கியமாக சிலர் பிறக்கும் பொழுது இருந்த பெயரையும், இப்பொழுது எப்படி அழைக்கப்படுகிறார் என்பதையும், பெயர் மாற்றத்தினால் அவரவர் வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்களையும் அறிந்துகொள்வது அவசியம். அவரவர் பெயர் எழுத்துகளை அவதானித்து, ஆங்கில எழுத்துக் கான எண்களை கணக்கிட்டு, உங்கள் கர்ம எண்களை மையமாகக் கொண்டு, பலன்தரக்கூடிய சாதகமான பெய ரெண்ணாக உங்கள் பெயர்களை ஆங்கில உச்சரிப்புக்கு பிறளாவண்ணம் மாற்றியமைத்து பலன் பெறலாம் என்பது என் சொந்த அனுபவத்தில் கண்டறிந்த உண்மை.

# நிவாரணம்

ஒவ்வொரு எண்ணிற்கும் பொருத்தமான இரத்தினக் கற்களை கீழே குறிப்பிடுகிறேன்.

| | | |
|---|---|---|
| 1 | சூரியன் | Ruby |
| 2 | சந்திரன் | White Pearl |
| 3 | வியாழன் | Yellow Sapphire |
| 4 | யுரேனஸ் / இராகு | Gomedh |
| 5 | புதன் | Emerald |
| 6 | வெள்ளி | Diamond |
| 7 | நெப்டியூன் / கேது | Cat's Eye |
| 8 | சனி | Blue Sapphire |
| 9 | செவ்வாய் | Red Coral |

இரத்தினக் கற்களின் பெயரை ஆங்கிலத்தில் எழுதியுள்ளேன். எனது ஆராயிச்சியின் கணிப்பின்படி குறிப்பிட்ட கர்ம எண்ணில் பிறந்தவருக்கு ஒத்த ஒரு இரத்தினக் கல்லை மட்டும் அணிந்து பலனடைவது சாத்தியமல்ல. கிரகங்களின் அமைப்பை சாதகக் குறிப்பி லிருந்து அறிந்து, அவரவருக்கு அவ்வப்போது நடக்கும் திசை, புத்திக்கேற்ப இரத்தினக் கற்களை வெள்ளி, செப்பு

அல்லது பொன் ஆபரணங்களில் அணிந்து அனுகூலம் பெறலாம். இருப்பினும் அணியும் இரத்தினக் கல்லை மோதிரத்திலோ அல்லது வேறு எந்த ஆபரணத்திலோ பதித்து அதன் ஒரு பகுதி வெளிப்புறத்திலும் மறு பகுதி உடம்பில் படும்படியாகவும் செய்து அணிவது முக்கியம். எந்த இலக்கினத்தில் பிறந்திருந்தாலும் அந்த இலக்கினத்தை ஆளும் கிரகத்திற்குரிய இரத்தினக் கல்லுடன், நடக்கும் திசை, புத்திக்கேற்ப இன்னுமொரு கல்லுடன் சேர்த்து அணிந்து கொள்வது தீய பலன்களை அதற்றும் வல்லமை உடையது என்பது சோதிட ஆய்வுகளின் முடிவு.



எஸ். துதிபாலசுந்தரன்

எண்கணித சோதிடத்தின் பிரகாரம் ஒருவரின் கர்ம எண்ணின் முக்கியத்துவம் என்ன என்பதை முதன் முதலாகத் தமக்கே உரிய பாணியில் இந்நூல் மூலம் தெரியப்படுத்துகிறார் திரு. எஸ். துதிபாலசுந்தரன்.

ஈழம் - யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒரு பாரம்பரியமிக்க குடும்பத்தில் பிறந்த இவர் பத்தாண்டுகளுக்கு மேலாகத் தமது குடும்பத்தோடு லண்டனில் வாழ்ந்து வருகிறார்.

எண்கணித சோதிடத்தைப் போலவே பிற சோதிடக் கலைகளிலும் நல்ல நிபுணத்துவம் பெற்ற இவர் உலகப் புகழ் பெற்ற எண்கணித மேதை சகுந்தலா தேவிக்கு லண்டன் வானொலியில் நேருக்கு நேர் சவால் விட்டு அவரைப் பின் வாங்கச் செய்து பரபரப்பை உண்டாக்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது.